வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 05.08.2024 திங்கட்கிழமை இதழ் : 218 பக்கங்கள் : 12

## ஜெனரல் ஜகத் ஜெயசூரியமீது நடவடிக்கை எடுக்காதது ஏன்?

### ஆஸி. செனட்டர் சட்டமா அதிபரிடம் கேள்வி

மெல்பர்ன், ஓக. 05

நம்பத்தகுந்த ஆதாரங்களின் அடிப்படையில் போர்க்குற்றச் சாட்டு சுமத்தப்பட்டுள்ள இலங்கையின் முன்னாள் இராணுவ தளபதி ஜெனரல் ஜகத் ஜெயசூரிய கடந்த 2019ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா வந்தபோது அவருக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை? - இவ்வாறு அவுஸ்திரேலியாவின் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் கேள்வி எழுப்பியுள்ளார் அந்த நாட்டின் கிறீன்ஸ் நியூசௌத் வேல்ஸ் செனட்டர் டேவிட்

11

## 45 நாட்களேயான குழந்தை கை, கால் முறித்து கொலை!

### அளவெட்டியில் கொடூரம்

- பா. பிரசன்னா -

யாழ்ப்பாணம், ஓக. 05

கை, காலை முறித்தும் தலையில் காயம் ஏற்படும் அளவுக்கு சித்திரவதை செய்தும் பிறந்து 45 நாட்களேயான குழந்தை கொல் லப்பட்டமை பிரேத பரிசோதனைகளில் தெரிய வந்துள்ளது.

அளவெட்டியை சேர்ந்த சசிரூபன் நிகாஷ் என்ற குழந்தையே

11

## பால் குடிக்க மறுத்ததால் கை, காலை திருகினேன்!

யாழ்ப்பாணம், ஓக. 05

குழந்தை பால் குடிக்க மறுத்து அடம்பிடித்ததால் அதன்,கை, கால்களை திருகினேன் என்று சித்திரவதை செய்து கொல்லப்பட்ட குழந்தையின் தாயார் பொலிஸாருக்கு அளித்த வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளார்.

அளவெட்டியை சேர்ந்த

11

# மத்தி எடுத்த அதிகாரங்களை மாகாணத்துக்கு வழங்குவோம்

## திருமலையில் ஜனாதிபதி ரணில் உறுதி

- பொலிஸ் அதிகாரம் புதிய பாராளுமன்றிலேயே பேச்சு
- திருகோணமலை - மன்னார் இடையே புதிய பாதை
- ஆயிரம் ஏக்கர்களில் புதிய முதலீட்டு வலயம்!

- பா. விபூஷிதன் -

திருகோணமலை, ஓகஸ்ட் 05

மத்திய அரசாங்கம் எடுத்த அதிகாரங்களை மாகாணத்துக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். இது தொடர்பாக மாவை சேனாதிராசா, சுமந்திரன் ஆகியோருடன் உடன்பட்டுள்ளோம் என்று கூறிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, புதிய பாராளுமன்றத்தில் பொலிஸ் அதிகாரம் குறித்து பேசுவோம் என்றும் கூறியுள்ளார்.

11



## மகிந்தவின் வாசல் வழியாக கட்சிக்கு திரும்பி வரலாம்!

### நாமல் ராஜபக்ஷ எம். பி.

கொழும்பு, ஓக. 05

நம் உள்ளமும் செயலும் தூய்மையானவை. எங்களால் முடிந்ததை செய்தோம். ஆனால், இன்று அவர்கள் எடுக்கும் முடிவு அவர்களின் முடிவு. திரும்பி வருபவர்களுக்கு கட்சியின் கதவு திறந்தே உள்ளது. அவர்கள் மகிந்த ராஜபக்ஷவின் வாசல் வழியாக கட்சிக்கு வந்து செல்லலாம் என்று நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அநுராதபுரத்தில் நடைபெற்ற சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சி கூட்டத்தின் பின்னர்

11

### பொலிஸ் மா அதிபர் விவகாரம்:

## "பிரதம நீதியரசருடன் பேசப் போவதில்லை!"

கொழும்பு, ஓக. 05

பொலிஸ் மாஅதிபர் விவகாரம் குறித்து பிரதம நீதியரசருடன் உரையாடப் போவதில்லை என்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஏனெனில், பிரதம நீதியரசருடன் கலந்துரையாடுவது என்பது சட்ட வரம்புக்கு அப்பால்பட்டது என்றும் சபாநாயகர் மேலும் தெரிவித்தார்.

தேசபந்து தென்னக்கோன் பொலிஸ்மா அதிபராக செயல்படுவதற்கு தடை விதித்து கடந்த

11

## தமிழ் அரசுக் கட்சியினரை சந்தித்து பேசினார் ரணில்!

திருகோணமலை, ஓக. 05

தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட உறுப்பினர்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

திருகோணமலை நகராட்சி மன்ற நகர மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை மதியம் இந்த நிகழ்வு நடைபெற்றது.

தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ச. குகதாசன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இதில், தமிழ் அரசுக் கட்சியினர் பலர் பங்கேற்றனர். (ஐ)

### திருக்கோணேஸ்வரம் ஆக்கிரமிப்பு:

## கேள்விக்கு பதிலளிக்காமல் நழுவிய ஜனாதிபதி ரணில்!

திருகோணமலை, ஓக. 05

திருக்கோணேஸ்வரம் ஆலய வளாகத்திலுள்ள ஆக்கிரமிப்பு கடைகளை அகற்ற வேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளிக்காமல் தவிர்த்த ஜனாதிபதி ரணில் அந்த ஆலயம் இந்திய நிதியுதவியில் புனரமைக்கப்படும் என்று கூறினார்.

நேற்று ஞாயிற்றுக்கிழமை திருகோணமலைக்கு சென்ற ஜனாதிபதி ரணில்

11

## தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் புலம்பெயர் அமைப்புகள் வரவேற்பு

நியூயோர்க், ஓக. 05

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரை களமிறக்கும் முடிவை தாம் வரவேற்பதாக ஐந்து புலம்பெயர் தமிழர் அமைப்புகள் தெரிவித்துள்ளன.

உலகத் தமிழ் அமைப்புகளின் பேரவை, வட அமெரிக்க தமிழ்ச் சங்கப் பேரவை, இலங்கை தமிழ்ச் சங்கம், ஒருங்கிணைந்த தமிழ் அமெரிக்கர்கள் அரசியல் நடவடிக்கைக் குழு, உலகத் தமிழ் அமைப்பு ஆகிய கட்சிகளே தமிழ் பொது

11

## அம்பாறை துப்பாக்கிச்சூட்டில் நால்வர் மரணம்!

கல்முனை, ஓக. 05

பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரையும் அவரின் மனைவி மற்றும் மாமியாரையும் சுட்டுக் கொன்றுவிட்டு தானும் தற்கொலை செய்து கொண்டார் பொலிஸ் அதிகாரி ஒருவர்.

அம்பாறை - நாமல் ஓயா - இக்கினியாகலை என்ற பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இக்கினியாகலை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றிவரும் பொலிஸ் உத்தியோகத்தரை சுட்டுக் கொன்ற பொலிஸ் அதிகாரி அவரின் மனைவியையும் மாமியாரையும் தொலைபேசி மூலம் பொலிஸ் நிலையத்துக்கு வருமாறு கூறியுள்ளார்.

சற்றுத்தூரத்தில்

11

### தேர்தலில் யாருக்கு ஆதரவு?

## மூன்று நாட்களின் பின்னரே மு. காவின் முடிவு தெரியும்!

கொழும்பு, ஓக. 05

ஜனாதிபதித் தேர்தலில் யாருக்கு ஆதரவு வழங்குவது என்பது தொடர்பான முடிவு இன்னும் மூன்று நாட்களில் அறிவிக்கப்படும் என்று சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் மூன்று விடயங்கள் குறித்து கலந்துரையாடப்படவுள்ளன. அவருடன், எதிர்வரும் 72

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதித் தேர்தல் மும்முனைப் போட்டியா அல்லது நான்குமுனைப் போட்டியா என்பது இன்னமும் தெரிய வில்லை. ஆனால், அந்த பிரதான வேட்பாளர்கள் மூவருமே தனக்கு போட்டியானவர்கள் இல்லை என்றும் தானே பிரதான வேட்பாளர் எனவும் கூறியிருக்கிறார் முன்னாள் நிதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ.

அண்மையில், ஒரு முக்கிய அரசியல் பிரமுகர் ஒருவர் வீட்டுக்கு சென்றிருந்த போது, எதுவித முன்னறிவிப்பும் இல்லாமல் அமைச்சர் விஜயதாஸ அங்கு வந்துவிட்டார்.

அவருடன் சற்று நேரம் செலவிட்டு விட்டு வருகிறேன் என்று அந்தப் பிரமுகர் அவரையும் அழைத்துக் கொண்டு ஒரு தனி அறைக்கு சென்று விட்டார்.

சில நிமிடங்கள் இருவரும் தனியாகப் பேசிக்கொண்டிருந்துவிட்டு. என்னையும் அந்த அறைக்கு அழைத்த அந்த அரசியல் பிரமுகர், விஜயதாஸ ராஜபக்ஷவை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார். ஏற்கனவே, அறிமுகமானவர் என்றாலும் சில விநாடிகள் பரஸ்பர அறிமுகத்துடன் அவர் அங்கிருந்து வெளியேற, அந்தப் பிரமுகரிடம் கேட்டேன், "இவர் வெற்றி பெறமுடியுமென்றா ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றார்?" என்று.

அதற்கு அந்தப் பிரமுகர் சொன்னார், "அப்படி நம்புகின்ற அளவுக்கு அவர் ஒன்றும் முட்டாள் இல்லையே? அவர் ஒரு சமூகத்தைச் சேர்ந்தவர். சுமார் மூன்று இலட்சம் வாக்குகள் அந்தச் சமூகத்தவர்களிடம் இருக்கின்றன. அந்தச் சமூகத்திலிருந்து மிக உயர்ந்த நிலைக்கு வந்தவர் இவர். அவர்கள் அனைவரும் இவருக்கு வாக்களிப்பார்கள். தன்னிடம் சில இலட்சம் வாக்குகள் இருக்கின்றன என்பதை வெளிக்காட்டுவது ஓர் அரசியல்வாதிக்கு பெறுமதியானதுதானே?" என்று என்னிடமே கேள்வியைக் கேட்டார் அந்தப் பிரமுகர்.

உண்மைதான், ஒரு தேர்தலில் அவர் வெற்றி பெறமுடியாது என்பதைத் தெரிந்துகொண்டும் மூன்று இலட்சம் வாக்குகளை ஒருவர் பெறுகிறார் என்றால், அது அவருக்கு அரசியலில் நல்ல மூலதனம்தான். அதேவேளை, அந்த சமூகத்தவர்கள் இவர் போட்டியிடாவிட்டால், அவர்களைப் போலவே மற்றுமொரு சமூகத்தை சேர்ந்தவரான சஜித் பிரேமதாஸவுக்குத்தான் வாக்களிப்பார்கள். அதனையும் தடுத்த தாகப் போகும் என்பதும் மற்றுமொரு காரணம் என்றார் அவர்.

பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து ஒருவர் களத்தில் இறங்கினால் போட்டி நான்கு முனைப் போட்டியாக மாறாவிட்டாலும் பெரமுனவின் வேட்பாளரும் கணிசமான வாக்குகளைப் பெறுவார் என்று நம்பப்படுவதால் நான்குமுனைப் போட்டியாகத் தோன்றினாலும் உண்மையான போட்டி ரணில்- சஜித்- அநுர என்ற மூவருக்கும் இடையில் தான்.

கடந்த சில நாட்களாக, தேர்தல் வட்டாரத்தில் ரணில் பற்றிய செய்திகளே முக்கிய இடத்தைப் பெற்றிருந்தன. மகிந்த - பஸில் - ரணில் ஆகியோர் கடைசியாக சந்தித்தபோது, பிரதமர் பதவியைத் தமக்குத் தரவேண்டும் என்று மகிந்த தரப்பு கோரிக்கை வைக்க, ரணில் பாராளுமன்றத்தையே கலைக்கப் போகின்றார் என்று புரளியை ரணில் தரப்பே கிளப்பிவிட்ட கையோடு, தேர்தல் அறிவிப்பும் வெளிவர முதல் ஆளாக சுயேச்சை வேட்பாளராக போட்டியிட ரணில் கட்டுப்பணம் செலுத்தினார்.

அவ்வாறு அவசரம் அவசரமாக அவர் கட்டுப்பணம் செலுத்தியது, "உங்கள் ஆதரவு தேவையில்லை. உங்கள் கட்சியின் ஆதரவுடன் போட்டியிடவும் நான் தயாராக இல்லை" என்பதை மகிந்த தரப்புக்கு சொல்லி வைக்கத்தான் என்பதும் புரிந்துகொள்ளக்கூடியதே.

ரணில் சுயேச்சையாக போட்டியிடும் முடிவை தனது பாணியில் அறிவிக்க பொதுஜன பெரமுன வேறு வழியின்றி தாமும் போட்டியிடும் முடிவை அறிவிக்க வேண்டியதாயிற்று.

பெரமுனவின் அந்த அறிவிப்பு வெளியாகியதும்தான், "கிளைமாக்ஸ்" தொடங்கியது. பொதுஜன பெரமுனவில் நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் ரணிலுடன் இணைவதாக முடிவை எடுத்ததும், "ஐக்கிய மக்கள் சக்தியின் பின்- ஐ. தே. க." என்ற நிலைக்கு பொதுஜன பெரமுன வந்திருக்கின்றது.

இப்போது ரணில் விக்கிரமசிங்க என்ற சுயேச்சை வேட்பாளரின் பின்னால் பொதுஜன பெரமுனவின் நூற்றுக்கு மேற்பட்ட எம். பிக்கள் அணிவகுத்து நிற்பதால், அவரே பிரதான போட்டியாளராக மாறிவிட்டதாக ஒரு தோற்றம் தெற்கில் தெரிகின்றது.

பொதுஜன பெரமுன என்பது மகிந்த ராஜபக்ஷ என்ற தனி மனிதனின் விம்பத்தை வைத்து கட்டிவளர்க்கப்பட்ட ஒரு கட்சி. அந்த விம்பத்துக்காக அந்தக் கட்சிக்கு கிடைக்கின்ற வாக்குகளிலேயே, அந்தக் கட்சியில் போட்டியிட்ட எம். பிக்கள் தத்தமது விருப்பு வாக்குகளை பெற்று எம். பிக்கள் ஆகினார்களே தவிர, அவர்கள் தனியாட்களாகப் போட்டியிட்டிருந்தால், தமக்குக் கிடைத்த விருப்பு வாக்குகளை தமக்கான வாக்குகளாகப் பெற்றிருப்பர்களா என்றால் நிச்சயம் அது சாத்தியமானதல்ல.

அப்படியெனில், பெரமுனவின் எம். பிக்கள் பெருந்தொகையில் ரணிலுடன் இணைந்துவிட்டதால் ஒவ்வொருவரும் வாக்குகளை கொண்டுவந்து ரணிலுக்கு சேர்ப்பார்கள் என்று யாராவது நம்பினால் அது அந்த எம். பிக்களின் தவறல்ல. தலைக்கு பத்தாயிரம் வாக்குகளை அவர்கள் தனிப்பட்ட முறையில் கொண்டுவந்தாலும் அவர்களால் கிடைக்கப்போவது வெறும் பத்து இலட்சம் வாக்குகள்தான்.

கடந்த பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக்கட்சியின் வாக்குகளை ஐக்கிய மக்கள் சக்தி கொண்டுசென்ற பின்னர், கொழும்பில் எப்போதும் மூன்று இலட்சத்துக்கும் குறையாத விருப்பு வாக்குகளைப் பெறும் ரணில் விக்கிரமசிங்க, எம். பியாகவே தெரிவு செய்யப்படக்கூடிய அளவுக்கு வாக்குகளைப் பெறமுடியவில்லை. அப்படியிருக்கையில், எம். பிக்கள் வந்து ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்துகொள்வதால் அவருக்குத் தேர்தலில் வெற்றி வாய்ப்பு ஏற்படுமா என்று தெற்கிலுள்ள மூத்த ஊடகவியலாளர் ஒருவரிடம் கேட்டேன்.

அவர் சொன்னார்: "அவர்கள் ரணிலுடன் இணைகின்றார்கள் என்றால், தாம் இணைவதால் அவருக்கு வாக்கு கிடைக்கும் என்பதற்காக அல்ல. மக்கள் அவருக்கு வாக்களிக்கப் போகிறார்கள் என்பதை அவர்கள் நாடி பிடித்து அறிந்துவிட்டார்கள் என்பதால்தான். அதாவது மக்கள் யாருக்கு வாக்களிக்க முடிவெடுத்து விட்டார்களோ அவர்களோடு போய் சேருவது தமக்கு நன்மை என்று நினைக்கிறார்கள்" என்றார்.

அப்போதுதான் ஒன்று புரிந்தது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாவுக்கு எதிராக வாக்களிப்பதற்கு தமிழ் மக்கள் முடிவெடுத்து விட்ட பின்னர், சஜித்துக்கு ஆதரவு வழங்க நமது தமிழ் தலைவர்கள் முடிவெடுத்தது போலத்தான் தெற்கிலும் முடிவெடுக்கிறார்களோ?

- ஊர்க்குருவி.

## மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய தீர்த்தத் திருவிழா வெகுசிறப்பு!



யாழ்ப்பாணம், ஒக. 05

வரலாற்றுச் சிறப்புமிக்க மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் தீர்த்தத்திருவிழா நேற்று பக்திபூர்வமாக நடைபெற்றது.

நேற்று அதிகாலை மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து முருகப் பெருமான், வள்ளி, தெய்வயானை சமேதராகவும் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் இருந்து நகுலேஸ்வரர் சமேதர நகுலாம்பிகை, விநாயகர் மற்றும் முருகப் பெருமான் வள்ளி தெய்வ யானையுடனும், கீரிமலை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இருந்து முத்துமாரி அம்மனும் எழுந்தருளி கீரிமலை புனித கண்டகி தீர்த்தத்தில் தீர்த்தத் திருவிழா சிறப்பாக நடைபெற்றது.

இந்தத் தீர்த்தத் திருவிழாவில் நாட்டின் பல பாகங்களில் இருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் பக்தி பூர்வமாக கலந்து கொண்டிருந்தனர்.

## மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் ஆடி அமாவாசை தீர்த்தத் திருவிழா!





மட்டக்களப்பு, ஒக. 05

வரலாற்று சிறப்புமிக்க மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தின் ஆடி அமாவாசை தீர்த்தோற்சவம் வெகுசிறப்பாக நேற்று நடந்தேறியது.

நேற்று காலை விநாயகர் மற்றும் கொடித்தம்பத்துக்கு விசேட பூசைகள் நடைபெற்று திருப்பொற்சுண்ணம் இடிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

அதனை தொடர்ந்து வசந்த மண்டபத்தில் விசேட பூசைகள் நடைபெற்று சுவாமி வீதியுலா சிறப்பாக நடைபெற்றன.

வெளிவீதியில் எருது வாகனத்தில் தீர்த்தக் கரையில் எழுந்தருளி அங்கு சிறப்பு பூசைகள் நடைபெற்றன. தொடர்ந்து தீர்த்தத் திருவிழா நடைபெற்றது. இந்தத் திருவிழாவில் நாடு முழுவதிலுமிருந்து பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்றனர்.

இதன்போது தந்தையை இழந்தவர்கள் பிதிர்க்கடனும் செலுத்தினர். (ஐ)

## அபிவிருத்தி அடைந்த மாவட்டமாக 10 வருடத்தில் யாழ்ப்பாணம் மாறும்!

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



யாழ்ப்பாணம், ஒக. 05

எதிர்வரும் 10 வருடங்களுக்குள் யாழ்ப்பாணம் அபிவிருத்தி அடைந்த மாவட்டமாக மாற்றப்படும் - என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் (ஈ. பி. டி. பி) யாழ். பணிமனைக்கு சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

நெருக்கடிகளில் இருந்து நாட்டை மீட்டெடுக்கும் தனது வேலைத் திட்டங்களுக்கு, ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வழங்கி வருகின்ற ஆதரவை சுட்டிக் காட்டினார். அத்துடன், இவ்வாறான ஒத்துழைப்பு எதிர்காலத்திலும் தொடர வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

அங்கு உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறியவை வருமாறு,

யாழ். மாவட்டத்தை "யாழ் நதி" திட்டத்தின் ஊடாக பொருளாதாரத்தை பலப்படுத்த எதிர்பார்க்கிறோம். அத்துடன், காங்கேசன்துறை துறைமுகத்தை அபிவிருத்தி செய்ய இந்தியாவுடன் கலந்தாலோசிக்கிறோம். சிமெந்து நிறுவனம் இருந்த இடத்தில் முதலீட்டு வலயமொன்று ஆரம்பிக்கப்படும்.

பூநகரியிலும் அதனை செய்வோம். பலாலியில் சுற்றுலா துறையை மேம்படுத்துவோம். காற்று, சூரிய சக்தி மூலம் பெருமளவில் இங்கு மின் உற்பத்தி செய்ய முடியும். அதனால் மேலும் பல பொருளாதார நன்மைகள் கிடைக்கும்.

எதிர்வரும் 10 வருடங்களுக்குள் யாழ்ப்பாணம் அபிவிருத்தி அடைந்த மாவட்டமாக மாற்றப்படும். எனவே, நாம் அடுத்தபடியாக பொருளாதார யுத்தத்தை எதிர்கொள்ள ஆரம்பிப்போம். அதற்கான பணிகளை நாம் முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ஐ)

## யானை தாக்கி குடும்பஸ்தர் பலி!

வவுனியா, ஒக. 05

மகனை காணவில்லை என்று தேடிச் சென்ற தந்தை யானை தாக்கி உயிரிழந்தார்.

வவுனியா வடக்கு, கற்குளம், பட்டிக்குடியிருப்பு குளம் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மரணமடைந்தவர் பட்டாறை பிரிந்த குளத்தை சேர்ந்த 58 வயது நபராவார்.

சம்பவம் தொடர்பான விசாரணைகளை நெடுங்கேணி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
05.08.2024 திங்கட்கிழமை
குரோதி வருடம், ஆடி 20

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் அரசு கட்சி ரணிலுடனா?

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு - கிழக்கில் மக்கள் சந்திப்புகளில் ஈடுபட்டு வருகின்றார். இந்த சந்திப்புகளில் அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுவதைக் கொள்கையாக கொண்டிருக்கும் கட்சிகளின் தலைவர்களும் பங்குகொள்கின்றனர். அதற்கு சமாந்தரமாக தமிழ்த் தேசிய அரசியலை பிரதிநிதித்துவம் செய்வதாகக் கூறிக்கொள்வோரும் பங்குகொள்கின்றனர்.

ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தை பிரதிநிதித்துவம் செய்யும் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்னும் அடிப்படையில் தாங்கள் பங்குகொள்ள வேண்டியிருக்கின்றது என்று அவர்கள் காரணம் கூறக்கூடும். அரசாங்கத்திடம் நிதியைக் கோரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி பங்குகொள்ளும் நிகழ்வுகளில் பங்குகொள்வதை ஒரு கட்டத்துக்கு மேல் குற்றஞ்சாட்ட முடியாதென்று கூற முடிந்தாலும்கூட ஜனாதிபதிக்கான பிரத்தியேக நிகழ்வுகளை ஏற்பாடு செய்து கொடுக்கும் காரியத்தை தமிழ்த் தேசியக் கட்சிகள் செய்ய முடியுமா? குறித்த கட்சிகள் நியாயப்படுத்தும் அரசியல் நிலைப்பாடுகளுக்கு அது சரியானதாக இருக்குமா?

ரணில் விக்கிரமசிங்கவின் திருகோணமலை பயணத்தின்போது இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் பிரத்தியேக சந்திப்பை ஏற்பாடு செய்திருக்கின்றார். மக்கள் சந்திப்பு என்னும் தலைப்பில் இந்த நிகழ்வு நடைபெற்றிருக்கின்றது. ஒருபுறம், ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவரை நிறுத்துவதற்கான முயற்சிகள் அதன் இறுதிக் கட்டத்தை அடைந்திருக்கும் நிலையில் இலங்கை தமிழ் அரசு கட்சி தென்னிலங்கையின் பிரதான வேட்பாளர்களில் ஒருவரான ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிரத்தியேக சந்திப்புகளை ஏற்பாடு செய்வதை எவ்வாறு புரிந்துகொள்ள முடியும்? அவ்வாறாயின், தமிழ் அரசுக் கட்சி ரணில் விக்கிரமசிங்கவை கொள்கையளவில் ஆதரிக்கின்றதா? அதற்காகத்தான், தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்படுவதை தொடர்ந்தும் எதிர்த்து வருகின்றதா?

தமிழ் அரசுக் கட்சி கொள்கையளவில் இரண்டு அணிகளாக இருப்பதான தோற்றத்துடன் இருக்கின்றது. ஓர் அணி தமிழ் பொது வேட்பாளரை கடுமையாக எதிர்த்து வருகின்றது. அடுத்த அணி தமிழ் பொது வேட்பாளரை ஆதரித்து வருகின்றது. ஆதரிப்பவர்களில் பிரதானமானவர் சிவஞானம் சிறீதரன். எதிர்ப்பவர்களில் பிரதானமானவர் எம். ஏ. சுமந்திரன். அணி வேறுபாடு தெளிவாகவே தெரிகின்றது. கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா என்ன செய்வதென்று தெரியாமல் தடுமாறுகின்றார். மாவை. சேனாதிராசா கட்சியின் தலைவர் என்னும் வகையில் தற்துணிவான முடிவை அறிவிக்க முடியும். ஆனால், அதனை செய்ய அவர் இதுவரையில் முயற்சிக்கவில்லை. இவ்வாறானதொரு பின்புலத்தில்தான் தமிழ் அரசு கட்சியின் ஒரு பகுதியினர் வெளிப்படையாகவே ரணில் விக்கிரமசிங்கவுடன் தங்களை அடையாளம் காண்பிக்க முயற்சிக்கின்றனர்.

ஒருவேளை, ரணிலை ஆதரிப்பதுதான் தமிழ் அரசுக் கட்சியின் கொள்கை நிலைப்பாடு என்றால் அதனை வெளிப்படையாக மக்களுக்கு சொல்ல வேண்டும். ஒருபுறம், தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிடப்பட்ட பின்னர்தான் கட்சியின் உத்தியோகபூர்வ முடிவை அறிவிப்போம் என்று கூறிக்கொண்டு - இன்னொரு புறமாக ரணில் விக்கிரமசிங்கவுக்கான மக்கள் சந்திப்புகளை ஏற்பாடு செய்து கொடுப்பதானது தமிழ் அரசுக் கட்சியின் கொள்கை தளம்பலையும் - அரசியல் தடுமாற்றத்தையும் - உள் முரண்பாடுகளின் தாக்கத்தையும் தெளிவாகவே காண்பிக்கின்றது. தமிழ் அரசுக் கட்சி தமிழ்த் தேசிய அரசியல் பயணத்திலிருந்து தெளிவாகவே விலகிச் செல்கின்றது அல்லது விலக்குவதற்கான சதிக்குள் சிக்கியிருக்கின்றது என்பதையே காண்பிக்கின்றது.

தேர்தல் காலத்தில் வழமைபோல் பல விடயங்களை ரணில் விக்கிரமசிங்க கூறலாம். அது அவரின் அரசியல் அணுகுமுறையாக இருக்கலாம். ஆனால், அதனை நிறுத்துப் பார்க்க வேண்டிய பொறுப்பு தமிழ் அரசுக் கட்சிக்கு உண்டு. அனைத்தையும் செய்துவிட்டு பின்னர், "நம்பினோம் ஏமாற்றிவிட்டார்கள்..." என்று கூறுவதில் பயனில்லை. ரணில் - மைத்திரி ஆட்சிக் காலத்தில் இதுதான் நடந்தது. புதிய அரசியல் யாப்பு என்று கூறி காலம் வீணாக விரயம் செய்யப்பட்டது.

# நல்லூர் கந்தசுவாமி ஆலய திருவிழா பின்பற்றவேண்டிய நடைமுறைகள்!

## யாழ். மாநகர சபை அறிவித்தது

யாழ்ப்பாணம், ஓக. 05

நல்லூர் கந்தசுவாமி ஆலய திருவிழா காலத்தில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் - நடைமுறைகள் - தீர்மானங்கள் தொடர்பில் மாநகர சபை அறிவித்துள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலய பெருந்திருவிழா எதிர்வரும் 9ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது. இந்தத் திருவிழாவுக்கான முன்னேற்பாடுகள் தொடர்பில் மாநகர ஆணையாளர் தலைமையில் நடந்த கூட்டத்தில் எடுக்கப்பட்ட விவரங்கள் வருமாறு,

ஆலய சூழலில் வீதி போக்குவரத்து நடவடிக்கைகள் நாளை மறுநாள் புதன்கிழமை (07.08.2024) நள்ளிரவு தொடக்கம் 04.09.2024 நள்ளிரவு வரை ஆலய வெளி வீதியின் ஊடான போக்குவரத்துக்கள் முற்றாக தடைசெய்யப்பட்டிருக்கும்.

பிரதான வீதித்தடைகள் பருத்தித்துறை வீதியில் மாநகர சபைக்கு முன்புறம் அரசடி சந்தி, கோயில் வீதியில் சங்கிலியன் வீதி சந்தி, பிராமணக்கட்டு குள வீதிச் சந்தி போன்ற இடங்களில் அமைக்கப்பட்டிருக்கும். சுகாதார பாதுகாப்பு தேவைகளுக்கேற்ப மேற்படி வீதித் தடைகளின் அமைவுகளில் மாற்றங்கள் ஏற்படலாம்.

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்டது போல இம்முறையும் மாற்று வீதி ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வீதி மூடப்பட்டிருக்கும் சமயங்களில் வழமைபோல் பருத்தித்துறை வீதி வழியாக வரும் வாகனங்கள் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு முன்னால் உள்ள குறுக்கு வீதியால் பயணித்து நாவலர் வீதி ஊடாக ஆனைப்பந்தி சந்தியை அடைந்து யாழ். நகரை அடைய முடியும். யாழ். நகரில் இருந்து திரும்பும் வாகனங்கள் அதே பாதை ஊடாக பருத்தித்துறை வீதியை அடைய முடியும்.

விசேட பெருந்திருவிழாக்களின் போது முத்திரைச்சந்தியில் திரும்பி கச்சேரி நல்லூர் வீதி ஊடாக நாவலர் வீதியை அடைந்து பயணிக்க முடியும்.

கோயில் வீதி வழியாக வரும் வாகனங்கள் சங்கிலியன் வீதியூடாக பருத்தித்துறை வீதியை அடைந்தும், செட்டித்தெரு ஒழுங்கையூடாக பருத்தித்துறை வீதியை அடைந்து பயணிக்க முடியும்.

தூக்குக் காவடிகள் வழமை போல் பருத்தித்துறை வீதி வழியாக உள் நுழைந்து சிறீ முருகன் தண்ணீர் பந்தலில் காவடிகள் இறக்கி டிராக்டர்கள் செட்டித்தெரு வீதியூடாக வெளியேற வேண்டும்.

ஆலய வீதிச்சூழலில் வீதித்தடைகளுக்குள் நிரந்தரமாக வசிப்பவர்களுக்கும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கும் வழமைபோல வாகன அனுமதி அட்டை மாநகர சபையால் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். நிரந்தர வியாபாரிகள் பொருட்களை ஏற்றி இறக்க விசேட நேரக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.


உற்சவ காலங்களில் சிறுவர்களை பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடமுடியாது. ஆலய வெளி வீதி சூழலில் வியாபார, விளம்பர மற்றும் ஒளிபரப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளமுடியாது.

வேண்டும். உற்சவ காலங்களில் ஆலயச் சூழலில் பொலித்தீன் பாவனை முற்றாக தவிர்க்கப்பட வேண்டும். உற்சவ காலங்களில் ஆலய வெளி வீதி சூழலில் காலணிகளுடன் நடமாடுவது தவிர்க்கப்பட்டுள்ளது.

உற்சவ காலங்களில் ஆலய சூழலில் பக்தி கீதங்கள் மட்டுமே ஒலிபரப்பு செய்யமுடியும். உற்சவ காலங்களில் விநியோகிக்கப்படும் விமைரங்கள் மற்றும் துண்டு பிரசுரங்களில் கடவுள் திருவுருவப்படங்கள் பிரசுரிப்பது தவிர்க்கப்பட்டுள்ளது

ஆலய சூழலில் ட்ரோன் கமெராக்களைப் பயன்படுத்தி காணொலி பதிவு செய்வது தவிர்க்கப்பட்டுள்ளது - மேற்குறித்த நடவடிக்கைகளுக்கு அமைவாக நல்லூர் பெருந்திருவிழா நடைபெறுவதற்கு அனைவரும் பூரண ஒத்துழைப்பை வழங்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

# தேர்தலை பகிஷ்கரிக்க கோரி முன்னணி துண்டுப்பிரசுரம்!




யாழ்ப்பாணம், ஓக. 05

ஜனாதிபதித் தேர்தலை பகிஷ்கரிக்குமாறு கோரி துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் நகரப் பகுதிகளில் இவ்வாறு துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், மற்றும் அந்தக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கனகரத் தினம் சுகாஷ் மற்றும் உறுப்பினர்கள் பங்கேற்று இந்தப் பிரசுரங்களை நேற்றுமுன்தினம் விநியோகித்தனர்.

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
கடந்த கால சுகமான அனுபவங்களை எல்லாம் மனதில் நிழலாடும். நீண்ட நாட்களாக வர வேண்டிய பணத்தை போராடி வசூலிப்பீர்கள். எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும் நாள்.

**இடபம்**
குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்றுக் கொள்வார்கள். சொந்த பந்தங்களை சிலர் கேட்ட உதவியை செய்வீர்கள். பிரபலங்களின் நட்பு கிடைக்கும். மனதிற்கு இதமான செய்தி வரும்.

**மிதுனம்**
கணவன் - மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். கடனாக கொடுத்த பணத்தை வசூலிப்பீர்கள். பிள்ளைகள் உங்கள் சொல்படிநடப்பார்கள். நீண்ட நாள் பிரச்னை தீரும். திருப்பங்கள் நிறைந்த நாள்.

**கடகம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் வேலைச்சுமையால் சோர்வாக காணப்படுவீர்கள் சில விஷயங்களுக்கு அனுபவ அறிவை பயன்படுத்துவது நல்லது. வாக்குறுதியை நிறைவேற்றப் போராட வேண்டி வரும்.

**சிம்மம்**
கணவன் - மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் வந்து நீங்கும். வெளிவட்டாரத்தில் அலைச்சல் அதிகரிக்கும் செலவுகள் மேலதிகாரியுடன் மோதல்கள் வந்து நீங்கும். கவனம் தேவைப்படும் நாள்.

**கன்னி**
குடும்பத்தில் உள்ளவர்களிடம் மனம் விட்டு பேசி மகிழ்வீர்கள். பழைய கடன் பிரச்னை கட்டுப்பாட்டிற்குள் வரும். நெடுநாட்களாக நீங்கள் பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார்.

**துலாம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உடன்பிறந்தவர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்து கொள்வார்கள். வீடு வாகனத்தை சீர் செய்வீர்கள். நினைத்தது நிறைவேறும் நாள்.

**விருட்சிகம்**
கோபத்தை கட்டுப்படுத்தி உயர்வதற்கான வழியை யோசிப்பீர்கள். பிள்ளைகளை புதிய பாதையில் வழி நடத்துவீர்கள். ஊழியர்களிடம் கனிவாக நடந்து கொள்ளுங்கள். சாதிக்கும் நாள்

**தனுசு**
சந்திராஷ்டமம் இருப்பதால் எந்த ஒரு காரியத்தையும் இரண்டு மூன்று முறை போராடி முடிக்க வேண்டி வரும். அதற்காக அலுத்துக் கொள் ளாதீர்கள். எதிர்பார்த்த பணம் தாமதமாக வரும்.

**மகரம்**
எதையும் தன்னம்பிக்கையுடன் செய்யத் தொடங்குவீர்கள். மூத்த சகோதரர் வகையில் உதவிகள் கிடைக்கும். மனைவி வழி உறவினர்கள் பக்கபலமாக இருப்பார்கள். நன்மை கிட்டும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். விருந்தினர்கள் வருகையால் வீடு களைக்கட்டும். அமோகமான நாள்.

**மீனம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகளால் மகிழ்ச்சியும், உறவினர்களால் ஆதாயமும் உண்டு. சிக்கனமாக செலவழித்து சேமிக்கத் தொடங்குவீர்கள். புதுமை படைக்கும் நாள்.

# சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த பயப்படுகிறார் தமிழக முதல்வர்

## ஸ்டாலின்மீது அன்புமணி சாடல்

தூத்துக்குடி, ஓக. 05

தமிழ்நாட்டில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த முதல்வர் மு. க. ஸ்டாலின் பயப்படுகிறார் - இவ்வாறு பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் அன்புமணி ராமதாஸ் சாடியுள்ளார்.

தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

காவிரி ஆற்றில் ஒரு இலட்சத்து 70 ஆயிரம் கனஅடி தண்ணீர் வெளியேற்றப்படுகிறது. விநாடிக்கு ஒரு இலட்சத்து 60 ஆயிரம் கனஅடி தண்ணீர் கடலில் கலந்து கொண்டிருக்கிறது. சென்னை மக்களுக்கு ஓராண்டு குடிநீர் தேவை 15 டி. எம். சி. நீர் மேலாண்மைக்கும், விவசாயத்துக்கும் முக்கியத்துவம் வழங்காத தி. மு. க. அரசு, வார்த்தை ஜாலத்தில் ஆட்சியை நடத்தி வருகிறது.

முதல்வர் வரும் காலத்தில் காவிரியில் தடுப்பணை கட்ட நடவடிக்கை எடுப்பார் என்று நம்புகிறோம். தமிழகத்தில் 5 கோடி மக்கள் காவிரியை நம்பி உள்ளனர். ஊழல் செய்வது, மின் கட்டணத்தை உயர்த்துவது, சட்டம் ஒழுங்கு கெட்டு விட்டது, கஞ்சா போதைப் பொருட்கள் சர்வ சாதாரணமாக தமிழகத்தில் கிடைக்கிறது என இதுதான் திராவிடம் மாடல்.

மின்சாரத் துறையில் ஊழல், இலஞ்சம், நிர்வாக சீர்கேடு, நிர்வாகிகளுக்கு தெரியாத அதிகாரிகள், அமைச்சர்கள் உள்ளனர். இதுதான் திராவிட மொடலா? 17 ஆயிரம் மெகா வாட் மின் திட்டங்கள் 20 ஆண்டுகள் காலமாக நிலுவையில் உள்ளது. 23 மாதத்தில் 3 முறை மின் கட்டணத்தை உயர்த்திய அரசு தி. மு. க. அரசு. இது மக்கள் விரோத ஆட்சி.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். குண்டர் தடுப்புச் சட்டத்தில் கைது செய்ய வேண்டும். பொலிஸ் துறையினருக்குத் தெரியாமல் எந்த வொரு போதைப்பொருளையும் விற்பனை செய்ய முடியாது - என்றார். (எ)

# சட்டம் - ஒழுங்கு பிரச்னையை மறைக்க தமிழ்நாடு அமைச்சர்கள் தீவிர முயற்சி

## பா. ஜ. க. மாநில துணைத் தலைவர்

தூத்துக்குடி, ஓக. 05

சட்டம் - ஒழுங்கு பிரச்னையை மறைக்க அமைச்சர்கள் முயற்சி செய்கின்றனர் என்று பா. ஜ. க. மாநில துணைத் தலைவர் நாராயணன் திருப்பதி விமர்சித்துள்ளார்.

தூத்துக்குடியில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

"தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் சிவசங்கர், கடவுள் இராமர் குறித்து மீண்டும் ஒரு சர்ச்சையை கிளப்பியுள்ளார். ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு அமைச்சர் ஒரு மாதிரி பேசுகின்றனர். சோழ சாம்ராஜ்ஜியம் பகுத்தறிவால் உருவானது அல்ல. சோழ சாம்ராஜ்ஜியம் என்பது இந்து நம்பிக்கைகள், இந்து பரவல்கள், இந்துக் கோவில்களை எழுப்பிய பேரரசு. அது கூட தெரியாமல் ஏதோ பேச வேண்டுமென இந்த நாட்டு மக்களின் நெஞ்சம் நிறைந்திருக்கும் இராமபிரானை தொடர்ந்து இழிவுபடுத்தி வருவது கண்டித்தக்கது.

உதயநிதி ஸ்டாலின் இந்து தர்மத்தை, இந்து மதத்தை அழிக்க வேண்டுமென பேசினார். தொடர்ந்து இப்படி எதையாவது பேசி, தமிழகத்தில் உள்ள சட்டம் - ஒழுங்கு சீர்குலைவை மடைமாற்றி, சட்டம் - ஒழுங்கு சீர்குலைவே இல்லை என்பது போல் பரபரப்பாக பேசி வருகின்றனர். இங்கு உள்ள அமைச்சர்கள் நிர்வாகத்தை கவனிக்க வேண்டும். தமிழகத்தில் தினமும் கூலிப்படைகளால் மக்கள் படுகொலை செய்யப்படுவது தொடர்ந்து வருகிறது. தி. மு. க. அரசு நிர்வாகம் சரியான முறையில் செயல்படவில்லை. சட்டம் - ஒழுங்கை காப்பாற்ற தவறிவிட்ட இந்த அரசு இனியும் இருந்து என்ன பயன்?" என்று அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# ஸ்டாலின்தான் முதல்வர் என்றாலும் ஆட்சி நடத்துவது பழனிச்சாமிதான்

## அ. தி. மு. க. முன்னாள் அமைச்சர் வளர்மதி

அனகாபுத்தூர், ஓக. 05

"தமிழக முதல்வராக மு. க. ஸ்டாலின் இருந்தாலும் ஆட்சி செய்வது அ. தி. மு. க. பொதுச் செயலாளர் எடப்பாடி கே. பழனிச்சாமிதான்" என அந்தக் கட்சியின் முன்னாள் அமைச்சர் வளர்மதி தெரிவித்தார்.

பம்மல் - அனகாபுத்தூர் பகுதியில் நடைபெற்ற பாதாளச் சாக்கடை திட்டத்தால் குண்டும் குழியுமாக மாறிய வீதியை புனரமைக்காத தாம்பரம் மாநகராட்சியைக் கண்டித்து அ. தி. மு. க. சார்பில் அனகாபுத்தூரில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதேவேளை, தமிழக போலிஸாரின் அதிகாரம் பறிக்கப்பட்டுள்ளது. ஜெயலலிதா ஆட்சியில் வீரப்பனை சுட்டுக் கொன்ற அதிகாரிகள் இருந்தனர். இராணுவக் கட்டுப்பாட்டுடன் பொலிஸ் துறை இருந்தது. பொம்மை முதல்வர் திடீரென்று இத்தனை வருடங்கள் கடந்த பின்பு அம்மா உணவகம் சென்று அது இல்லை, இது இல்லை என்று ஞானம் வந்தது போல் இப்போது பிதற்றுகிறார். தமிழகத்தில் விலைவாசி உயர்ந்துவிட்டது. அனைத்து கட்டணங்களையும் உயர்த்தி விட்டார்கள். மக்கள் அன்றாடம் வாழ்க்கை நடத்துவதற்கு சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். பொதுமக்களே சிந்தியுங்கள். தி. மு. க. ஆட்சியை அகற்றும் வரை நாம் போராட வேண்டும் என்றும் தெரிவித்தார். (எ)


இலங்கை கடற்படை ரோந்துக் கப்பல் மோதியதால் நடுக்கடலில் மூழ்கி உயிரிழந்த தமிழக மீனவர் மலைச்சாமியின் உடல் இராமேஸ்வரம் கொண்டுவரப்பட்டது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வரலாற்று பிரசித்தி பெற்ற மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயத் தேர்த் திருவிழா நேற்றுமுன்தினம் நடைபெற்றபோது...! (படங்கள் : ஜி.எல்.தர்ஷன்)

# 176 கிலோ கேரள கஞ்சாவுடன் கிளிநொச்சியில் மூவர் கைது!



கிளிநொச்சி, ஒக. 05

**சுமார் 7 கோடி ரூபாய் பெறுமதியான 176 கிலோ கேரள கஞ்சாவுடன் மூன்று சந்தேகநபர்களை கடற்படையினர் நேற்று கிளிநொச்சியில் கைதுசெய்தனர்.**

கிளிநொச்சி - வலைப்பாடு - எருமைத்தீவு கடற்பரப்பில் கண்காணிப்பு பணியில் ஈடுபட்ட படையினரே அவர்களை கைது செய்தனர்.

படகில் மறைத்து வைத்து கடத்தப்பட்ட 176 கிலோ கஞ்சாவை கைப்பற்றிய கடற் படையினர், கஞ்சாவுடன் அவர்களை ஜெயபுரம் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

மன்னாரை சேர்ந்த 22, 34, 36 வயது நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர். இவர்களை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)



## வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் கூட்டம் நடந்தது!

கிளிநொச்சி, ஒக. 05

வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் கூட்டம் அதன் தலைவர் என். வீ. சுப்பிரமணியம் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

பூநகரி கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சமாச மண்டபத்தில் நடந்த இந்த நிகழ்வில் மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

இதில், வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தை பிரதிநித்துவப்படுத்தும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களின் பிரதிநிதிகள், தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்க அமைப்பாளர் கேர்மன் கமார, அதன் பிரதிநிதி சுபாஜினி, மற்றும் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்க வடக்கு மாகாண இணைப்பாளர்கள் பங்கேற்றனர்.

இதில் மீனவர் நலன்சார்ந்து பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

### காரைநகர் கடற்பரப்பில்
## இந்திய மீனவர் நால்வர் கைது!


யாழ்ப்பாணம், ஒக. 05

காரைநகரை அண்மித்த பகுதியில் அத்துமீறி மீன்பிடித்த இந்திய கடற்றொழிலாளர்கள் நால்வர் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படை அறிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று கடற்படை பேச்சாளர் கப்டன் கயான் விக்ரம சூரிய தெரிவித்துள்ளார்.

இதன்போது, அவர்களுக்கு சொந்தமான படகு ஒன்றும் கைப்பற்றப்பட்டதாக பேச்சாளர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், குறித்த கடற்றொழிலாளர்கள் கரைக்கு அழைத்து வரப்பட்டனர். அத்துடன், மேலதிக விசாரணைகளுக்காக மயிலிட்டி கடற்றொழில் பரிசோதகரிடம் அவர்கள் ஒப்படைக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)





## ஞானச்சுடர் வெளியீடும் உதவி திட்டம் வழங்கலும்!

வடமராட்சி, ஒக. 05

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரிம சைவ, கலை பண்பாட்டு பேரவையின் சஞ்சிகையான ஞானச்சுடர் 319 ஆவது இதழ் வெளியிடப்பட்டது. இதன்போது, உதவித் திட்டங்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் உறுப்பினர், முன்னாள் அதிபருமான ஆ. சிவநாதன் தலைமையில் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் முன்னிலையில் நடைபெற்றது.

வெளியீட்டுரையை செல்வி தயாளினி குமாரசாமி, மதிப்பீட்டுரையை திருமதி. சசிலேகா ஜெயராஜன் ஆகியோர் ஆற்றினர். இதைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில், உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் பாடசாலையின் உதைபந்தாட்ட, கரப்பந்தாட்ட அணியினருக்கான சீருடைகள், பந்துகள் கொள்வனவுக்காக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பலரும் பங்கேற்றனர். (ஐ 02)

## 45 நாட்களேயான குழந்தையின் உடலில் காயங்கள், தழும்புகள்!

### பிரேத பரிசோதனைக்கு உத்தரவு

யாழ்ப்பாணம், ஒக. 05

பிறந்து 45 நாட்களேயான நிலையில் உயிரிழந்த குழந்தையின் உடலில் காயங்கள் - தழும்புகள் காணப்பட்டமையால் குழந்தையின் உடலை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

அளவெட்டியை சேர்ந்த குழந்தை தாய்ப்பால் புகட்டப்பட்ட சில மணி நேரத்தில் மயக்கமுற்றது. இதையடுத்து அந்தக் குழந்தை அளவெட்டி பிரேதச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டது.

இந்த நிலையில் குழந்தை உயிரிழந்தது. அங்கு நடத்தப்பட்ட மரண விசாரணையில் குழந்தையின் உடலில் காயங்கள், தழும்புகள் காணப்பட்டன. இதையடுத்து குழந்தையின் உடலை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்த நேற்று முன்தினம் பணிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் தெல்லிப்பழை பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## வாக்குமூலம் அளிக்காமல் இழுத்தடித்த வர்த்தகர் கைது!

மன்னார், ஒக. 05

வாக்குமூலம் அளிக்காததால் மன்னாரின் பிரபல வர்த்தகர் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மணல் அகழ்வு தொடர்பான முரண்பாடு தொடர்பில் ஆத்திமோட்டை விவசாய அமைப்பின் தலைவரை தாக்கிக் காயப்படுத்தினார் என்ற குற்றச்சாட்டிலேயே அவர் மறியலில் வைக்கப்பட்டார்.

இந்த வழக்கில் நீண்ட நாட்களாக வாக்குமூலம் வழங்குமாறு வர்த்தகருக்கு இலுப்பைக்கடவை பொலிஸார் அழைப்பு விடுத்தனர். ஆனால், அவர் சமுகமளிக்கவில்லை.

இந்த நிலையில், நீதிமன்றம் கடந்த மாதம் அவருக்கு வாக்குமூலம் வழங்குமாறு எச்சரிக்கை விடுத்தது. ஆனால், மீண்டும் அவர் வாக்குமூலம் வழங்க மறுத்ததை அடுத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது வீடுகள் எரியூட்டப்படுவதற்கு நாமல் உள்ளிட்ட சிலரே காரணம்!

## சந்திரசேன எம். பி. தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 05

**நாமல் ராஜபக்ஷ உட்பட ஒரு தரப்பினர் 2022 மே 09ஆம் திகதி செய்த தவறால் எமது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இவர்கள் தவறு செய்ய நாங்கள் தண்டனை அனுபவித்தோம். இவ்வாறானவர்களுடன் அரசியல் செய்வதைவிட தற்போது எடுத்துள்ள தீர்மானம் சிறந்ததாக உள்ளது என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். எம். சந்திரசேன தெரிவித்தார்.**

அநுராதபுரத்தில் நேற்று நடந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், அநுராதபுரம் மாவட்ட மக்களின் அபிலாசைக்கு அமைவாகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க தீர்மானித்தேன். நாடு பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டுவிட்டது. தற்போதைய முன்னேற்றத்தைத் தொடர வேண்டுமாயின் ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் மீண்டும் தோற்றம் பெற வேண்டும் என்று சாதாரண மக்கள் குறிப்பிடுகிறார்கள்.

மீண்டும் பரீட்சித்து பார்க்கும் நிலையில் நாடு இல்லை. நாட்டு மக்கள் தெளிவாக உள்ளார்கள். 2022ஆம் ஆண்டு பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியின்போது மாறுபட்ட அரசியல் கொள்கையுடைய ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதியாக்குவதற்கு கட்சி எடுத்த தீர்மானத்துக்கு நாங்கள் நிபந்தனையற்ற வகையில் ஆதரவு வழங்கினோம்.

நிறைவேற்றுக்குழு கூட்டத்தில் எடுத்த தீர்மானத்தை ஏற்க போவதில்லை. எமது மாவட்ட மக்களின் தீர்மானத்துக்கு அமையவே ஜனாதிபதியுடன் ஒன்றிணைந்துள்ளேன். எனது தீர்மானத்தில் மாற்றமில்லை. கட்சியின் தலைவர் மகிந்த ராஜபக்ஷ கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்களின் நிலைப்பாட்டுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகிறோம்.

பொதுஜன பெரமுனவின் தீர்மானத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்கியவர்கள் தொடர்பில் கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அறகலயவின் போது அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டமை சிறந்தது என்று அவர் குறிப்பிட்டுள்ளமை முறையற்றது.



நாமல் ராஜபக்ஷ உள்ளிட்ட தரப்பினர் 2022.05.09ஆம் திகதி செய்த தவறால்தான் எமது வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. இவர்கள்தான் போராட்டக்களத்துக்கு தாக்குதல் நடத்தும் வகையில் அரசியல் கூட்டங்களை நடத்தினார்கள். இதன் பின்னர்தான் அரசியல்வாதிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன. பாராளுமன்ற உறுப்பினர் அமரகீர்த்தி அதுகோரளவும் படுகொலை செய்யப்பட்டார். இவர்கள் இழைத்த குற்றத்துக்கு நாங்கள் தண்டனை அனுபவித்தோம்- என்றார். (ஐ)

# உறுமய வேலைத் திட்டத்தை இடைநிறுத்த நடவடிக்கை!

கொழும்பு, ஓக. 05

உறுமய காணி உறுதிப்பத்திர விநியோகம் உள்ளிட்ட பல வேலைத் திட்டங்களைத் தற்காலிகமாக இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், ஜனாதிபதித் தேர்தலின் பின்னர் அந்த வேலைத் திட்டங்களைத் தேவைக்கு ஏற்ப மீள அமுல்படுத்த முடியும் - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# ரூ. 15,500 கோடி பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் ஏலம்!

கொழும்பு, ஓக. 05

15 ஆயிரத்து 500 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்கள் ஏல விற்பனையின் ஊடாக வழங்கப்படவுள்ளன என்று இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

நாளை மறுதினம் நடைபெறவுள்ளது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, 91 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 5 ஆயிரத்து 500 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும், 182 நாட்கள் முதிர்வுக் காலத்தைக் கொண்ட 5 ஆயிரத்து 500 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளன.

மேலும், 364 நாட்கள் முதிர்வு காலத்தைக் கொண்ட 4 ஆயிரத்து 500 கோடி ரூபாய் பெறுமதியான திறைசேரி உண்டியல்களும் ஏல விற்பனை ஊடாக வழங்கப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# ஜனாதிபதித் தேர்தல் முடிவை கணிப்பது கடினமாகி வருகிறது!

## ஜப்பானிய தூதுவர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 05

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளை கணிப்பது மிகவும் கடினமானதாகி வருகின்றது என்று இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோசி ஹிடேகி பேட்டி ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இலங்கையுடன் இராஜதந்திர உறவுகளை நாங்கள் ஆரம்பித்த காலம் முதல் அனைத்து அரசாங்கங்களுடனும் நாங்கள் சிறந்த உறவை கொண்டிருக்கின்றோம்.

எனினும், அனைத்தும் புதிய அரசாங்கத்தை பொறுத்தது. பொருளாதார கொள்கையில் தொடர்ச்சி பேணப்படும் என நான் எதிர்பார்க்கின்றேன். இலங்கை தான் ஏற்றுக் கொண்ட சர்வதேச நாணய நிதியத்தின் சீர்திருத்த திட்டங்களை தொடர்ந்தும் முன்னெடுக்கும் என்ற எதிர்பார்ப்பின் அடிப்படையிலேயே கடன் மறுசீரமைப்பு தொடர்பான உடன்படிக்கை கைசாத்திடப்பட்டது.

ஜப்பான் மாத்திரமல்ல கடன்மறுசீரமைப்புக்கு இணங்கிய ஏனைய அனைத்து நாடுகளும் இந்த அனுமானத்தின் அடிப்படையிலேயே அதற்கு ஆதரவளித்தன.

கொள்கையில் தொடர்ச்சி காணப்பட்டால் இலங்கை மக்களுக்கு மாத்திரமல்ல முதலீட்டாளர்களுக்கும் அதனால் நன்மை ஏற்படும் - என்றார். (ஐ)

# சமூக ஊடகங்களில் தவறான தகவல் பரப்பினால் நடவடிக்கை



கொழும்பு, ஓக. 05

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சமூக ஊடகங்கள் ஊடாக தவறான தகவல்களைப் பகிர்வதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சமூக ஊடகங்களில் தவறான தகவல்களை கையாள்வது தொடர்பில் கூகுள் உள்ளிட்ட தொடர்புடைய நிறுவனங்களுடன் கலந்துரையாடியுள்ளதாகவும் அந்த ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

அரசமைப்பின் பிரகாரம் சமூக ஊடகங்கள் ஊடாக தவறான தகவல்களைப் பகிர்வதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியும் என்று தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

# சட்டவிரோதமாக வெளிநாடுகளுக்கு செல்லும் சம்பவங்கள் அதிகரிப்பு!

கொழும்பு, ஓக. 05

இலங்கையில் இருந்து சட்டவிரோதமாக வெளிநாடு செல்ல முற்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்று குடிவரவு - குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

கட்டுநாயக்கா விமான நிலையம் ஊடாக போலி ஆவணங்களை காண்பித்து வெளிநாடுகளுக்கு செல்ல முயல்வோரின் தொகையே இவ்வாறு அதிகரித்துள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டில் மாத்திரம் 181 போலி ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன. எல்லை கண்காணிப்பு பிரிவின் 2023ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையை வெளியிட்டு, குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் இதனைத் தெரிவித்துள்ளது.

2022 ஆம் ஆண்டில் 62 போலி ஆவணங்கள் தொடர்பான சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மருத்துவர்களின் பொறுப்பின்மையால் உயிரிழந்த இளம் தாய்க்கு நீதி வேண்டும்!

## மன்னார் பொது அமைப்புகள் கடிதம்

கொழும்பு, ஓக. 05

மருத்துவர்களின் பொறுப்பற்ற செயலால் உயிரிழந்த இளம் தாய்க்கு நீதி வேண்டும் என்று கோரி மன்னார் மாவட்ட பொது அமைப்புகளின் ஒன்றியம் சுகாதார அமைச்சின் செயலாளருக்கு கடிதம் அனுப்பியுள்ளது.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

மேலும், "திருமதி மரியராஜ் சிந்துஜா என்பவர் கடந்த மாதம் 9ஆம் திகதி மன்னார் மருத்துவமனையில் சத்திர சிகிச்சை மூலம் குழந்தை பெற்றுள்ளார். 11ஆம் திகதி தாயும் சேயும் நலமாக வீடு சென்றுள்ளனர். 16ஆம் திகதி தையல் வெட்டுவதற்காக முருங்கன் மருத்துவமனைக்கு சென்றுள்ளனர்.

பின்னர் 27ஆம் திகதி குருதி பெருக்கு காரணமாக இரவு மன்னார் மாவட்ட மருத்துவமனையில் சேர்ந்துள்ளனர். மறுநாள் காலை வரை எந்த மருத்துவரும் அவர்களை பார்வையிடவில்லை. விடுதிக்கு பொறுப்பான மருத்துவர்கள் விடுதியில் இருந்துள்ளனர்.

தாதிய உத்தியோகத்தர் மருத்துவர்களுக்கு அறிவித்தும் அவர்கள் வரவில்லை. ஆகவே மருத்துவர்களின்பொறுப்பற்ற செயலால் அந்த பெண் மரணமானார். மருத்துவமனைகளில் இவ்வாறான பொறுப்பற்ற செயல்கள் தொடர்வது வாடிக்கையாகிவிட்டது. அதுவும் இரவுநேரங்களில் இந்த நிலை தொடர்கின்றது. உயிருடன் விளையாடும் அசட்டையீனங்கள் தொடர்கின்றன.

மருத்துவ தவறு எனும் சட்டபாதுகாப்பு கவசத்தால் தினந்தோறும் நாடுதோறும் பலர் பலியாகின்றனர். இந்த விடுதிக்கு பொறுப்பாகயிருந்த மருத்துவரின் பொறுப்பற்ற செயல்பாட்டால் ஒரு இளம் பட்டதாரி பெண்ணை கொலை செய்துவிட்டனர்.

இவர்கள் இந்த பெண்ணின் மரணத்துக்கு பொறுப்புகூற வேண்டும்.

பொறுப்பற்ற உத்தியோகத்தர்கள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 50 அடி பள்ளத்தில் பாய்ந்து லொறி விபத்துக்குள்ளானது

கொழும்பு, ஓக. 05


வீதியை விட்டு விலகிய லொறி 50 அடி பள்ளத்தில் விழுந்து விபத்துக்குள்ளானது.

பதுளை - அப்புத்தளை - தங்கமலை பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த லொறி நுவரெலியா வெலிமடை - அப்புத்தளை ஊடாக கொழும்பு நோக்கி பயணித்த போது தங்கமலை பகுதியில் வீதியை விட்டு விலகி, சுமார் 50 அடி பள்ளத்தில் வீழ்ந்தது.

விபத்துக்குள்ளான லொறியில் சாரதியும் அவரின் உதவியாளரும் இருந்தனர். தெய்வாதீனமாக எவருக்கும் காயங்கள் எதுவும் ஏற்படவில்லை என்று தெரிய வந்தது. (ஐ)

# பெரமுனவின் ரோஹிதவும் ரணில் பக்கம் தாவினார்!



கொழும்பு, ஓக. 05

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தனது ஆதரவை வழங்கவுள்ளதாக சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அழைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரோஹித அபேகுணவர்த்தன அறிவித்துள்ளார்.**

நிகழ்வொன்றில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரி வித்தார். இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"அரசியலில் நிரந்தர நண்பர்களோ எதிரிகளோ கிடையாது. மக்கள் விடுதலை முன்னணிக்கு இந்த நாட்டை கொடுப்பதா? அல்லது காலை பேசுவதை மாலையே மறக்கும் சஜித்துக்கு நாட்டை கொடுப்பதா அல்லது நாட்டுக்காக ஒரு முடிவை எடுப்பதா?

எங்களுக்கு உண்மையான அதாவது உங்கள் மொழியில் அரசியல் எதிரி, ஜே. வி. பி. மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி. எனவே, அவர்களுக்கு நாங்கள் ஆதரவு வழங்க முடியாது. எனது பிரதேச மக்களின் விருப்பத்துக்குப் பணிந்தே இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளேன்" - என்றார். (ஐ)

# ஜனாதிபதித் தேர்தலுக்கான அச்சிடும் செலவு அதிகரிப்பு

கொழும்பு, ஓக. 05

கடந்த ஜனாதிபதித் தேர்தலுடன் ஒப்பிடும்போது, இந்த முறை ஜனாதிபதி தேர்தலுக்கான அச்சு செலவினம் மூன்று மடங்கு அதிகரிக்கக்கூடும் என்று அரச அச்சக மாஅதிபர் கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தலுக்கான அச்சுப் பணிகளுக்காக சுமார் 80 கோடி ரூபாய் செலவிடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. கடந்த ஜனாதிபதித் தேர்தலில் அச்சிடப்பட்ட வாக்குச் சீட்டின் நீளம் 27 அங்குலமாக இருந்தது.

இந்த முறை வேட்பாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தால், வாக்குச் சீட்டின் நீளம் அதிகரிக்குமாயின், அச்சிடும் செலவுகளும் அதிகரிக்கக்கூடும் என்றும் அச்சக மாஅதிபர் தெரிவித்தார். (ஐ)



## அத்துருகிரிய துப்பாக்கிச்சூடு:
# சந்தேகநபர்களை பிடிப்பதற்கு மக்கள் உதவி கோரும் பொலிஸ்

கொழும்பு, ஓக. 05

கொழும்பு - அத்துருகிரியவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பில் தேடப்படும் மூன்று சந்தேக நபர்களின் புகைப்படங்களை பொலிஸார் வெளியிட்டுள்ளனர்.

கடந்த 08 ஆம் திகதி அத்துருகிரிய பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டில் கிளப் வசந்த உள்ளிட்ட இருவர் உயிரிழந்தனர். அத்துடன், கிளப் வசந்தவின் மனைவி மற்றும் பாடகி சுஜீவா உள்ளிட்ட சிலர் படுகாயமடைந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பாக சந்தேகநபர்கள் பலர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

துப்பாக்கிச் சூடு சம்பவம் தொடர்பில் அதுருகிரிய பொலிஸாரும் மேல் மாகாண தெற்கு குற்றத்தடுப்பு பிரிவினரும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்நிலையில் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் மூன்று சந்தேக நபர்களை பொலிஸார் அடையாளம் கண்டுள்ளதுடன், அவர்களைக் கண்டுபிடிக்க பொதுமக்களின் உதவியை நாடியுள்ளனர்.

சந்தேகநபர்களில் ஒருவர் "சங்க" (தேசிய அடையாள அட்டை இலக்கம்- 951350753V) என அழைக்கப்படும் தருகர வருண இந்திக டி சில்வா என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இரண்டாவது சந்தேக நபர் "சண்டி" (தே. அ. அ. இல. 199207801772), அஹூங்கல்ல மாகும்புரவில் வசிக்கும் பட்டி ஹரம்பேஜ் அஜித் ரோஹண ஆவார். மூன்றாவது சந்தேக நபர் முதுவடுர தரிந்து மதுசங்க டி சில்வா என்ற "பஹிரவாய".

சந்தேகநபர்கள் தொடர்பில் தகவல் கிடைக்கப்பெற்றால் மேல் மாகாண தெற்கு குற்றப் பிரிவு: 072-422 2223, அதுருகிரிய பொலிஸ்: 071-859 1657 ஆகிய தொலைபேசி இலக்கங்களுக்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

# குளத்தில் மூழ்கி இளைஞர் மரணம்!

கொழும்பு, ஓக. 05

குளத்தில் நீராடியவர்களில் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

18 வயதான இளைஞரே இவ்வாறு உயிரிழந்தார். உயிரிழந்தவரும் அவரின் நண்பர்களும் குளத்தில் நீர் வெளியேறும் பகுதியில் நீராடிக் கொண்டிருந்தனர்.

அந்தச் சமயம் இளைஞர் நீரில் அடித்துச் செல்லப்பட்டதில் அவர் உயிரிழந்தார்.

கம்பஹா - கெடவலை பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் உடுகம்பலையை சேர்ந்த 18 வயது இளைஞரே உயிரிழந்தார். (ஐ)

# பேருந்துகள் மோதியதில் 22 பேர் காயமடைந்தனர்!

கொழும்பு, ஓக. 05

இரண்டு தனியார் பேருந்துகள் மோதிய விபத்தில் 22 பேர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

பொலநறுவையில் மஹா ஓயா - அரலகங்வில வீதியில் ஏரிக்கு செல்லும் சந்திக்கு அருகில் நேற்றுமுன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

மஹா ஓயாவிலிருந்து அரலகங்வில நோக்கி பயணித்த தனியார் பேருந்தும், எதிர்திசையில் வந்த மற்றுமொரு தனியார் பேருந்தும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில், இரண்டு பேருந்துகளிலும் பயணித்த 8 சிறுவர்கள், 12 பெண்கள், இரு ஆண்கள் காயமடைந்து மகா ஓயா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் பேருந்துகளின் சாரதிகள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

# விண்ணப்ப திகதி இன்றுடன் நிறைவு

கொழும்பு, ஓக. 05

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு தபால் மூல வாக்காளர்களின் விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் நடவடிக்கை இன்றுடன் நிறைவடைகிறது.

அத்துடன் விண்ணப்ப படிவத்தை பூரணப்படுத்துவதற்காக வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்பட்டுள்ள தகவல்களை தேர்தல்கள் ஆணைக் குழுவின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# லெபனானிலுள்ள இலங்கையர் தொடர்பில் அச்சம் வேண்டாம்!

## இலங்கை தூதரகம் அறிவிப்பு

கொழும்பு, ஓக. 05

லெபனானில் வசிக்கும் இலங்கையர்களின் பாதுகாப்பு குறித்து தேவையற்ற அச்சம் கொள்ள வேண்டாம் என லெபனானில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள லெபனானுக்கான இலங்கை தூதுவர் கபில ஜயவீர, தொழிலாளர்களுடன் தூதரகம் நெருங்கிய உறவைப் பேணி வருகிறது என்றும் தெரிவித்தார்.

தற்போது லெபனானில் உள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை 7 ஆயிரத்து 600ஐ அண்மித்துள்ளது. இதில், கிட்டத்தட்ட 25 இலங்கை தொழிலாளர்கள் போர் நிலவும் தென் பிராந்தியங்களில் இருப்பதாகத் தூதுவர் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும், அவர்கள் அனைவரும் மிகவும் பாதுகாப்பாக இருக்கின்றனர். இந்நிலையில், லெபனானில் வசிக்கும் இலங்கையர்கள் தங்கள் நடமாட்டத்தை மட்டுப்படுத்தவும் மக்கள் கூடும் இடங்களில் தங்குவதைத் தவிர்க்கவும் தூதுவர் அறிவுறுத்துகிறார்.

இலங்கையில் உள்ள அவர்களின் குடும்பங்களின் உறவினர்கள் லெபனானில் உள்ள பணியாளர்களுடன் முடிந்தவரை தொடர்பு கொள்ளுமாறு தூதுவர் அறிவுறுத்தியுள்ளார்.

இதேவேளை, இஸ்ரேலில் இருந்து துபாய், அபுதாபி மற்றும் புதுடில்லி ஊடாக கொழும்புக்கு வருவதற்கான விமானங்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக இலங்கை தூதுவர் நிமல் பண்டார குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# தேர்தல் கடமைக்கு 50,000 பொலிஸார்!

கொழும்பு, ஓக. 05

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான கடமைகளுக்காக 50,000 பொலிஸ் உத்தியோகத்தர்களை ஈடுபடுத்த எதிர்பார்த்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்குத் தேவையான பொலிஸ் உத்தியோகத் தர்களின் எண்ணிக்கை ஏற்கனவே கணக்கிடப்பட்டு வருவதாக ஜனா திபதித் தேர்தலுக்கு பொறுப்பான உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதன்படி, வாக்களிப்பு நிலையங்களுக்கு அனுப்பப்பட்டுள்ள எண்ணிக்கை, பொலிஸ் புலனாய்வு அதிகாரிகள் மற்றும் வாக்குப் பெட்டிகளை கொண்டு செல்வது தொடர்பான பொலிஸ் உத்தியோ கத்தர்கள் மற்றும் ஏனைய பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப் படவுள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுமந்திரன், சிறீதரனை வெறுங்கையுடன் ஜனாதிபதி அனுப்ப நான்தான் காரணம்!

## சொல்கிறார் மு. கா. பிரதித் தலைவர் ஹரீஸ்



கல்முனை, ஓக. 05

**சுமந்திரன், சிறீதரன், சாணக்கியன் உள்ளிட்ட தமிழ்க் கட்சி எம்.பிக்களை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெறுங் கையுடன் திருப்பி அனுப்ப நான்தான் காரணம் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவரும், திகாமடுல்ல பாராளுமன்ற உறுப்பினருமான எச். எம். ஹரீஸ் தெரிவித்தார்.**

கல்முனை தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் எதிர்காலச் சந்ததிகளையும், இந்த மண்ணின் மக்களையும் நாங்கள் அடிமையாக்க ஒருபோதும் அனுமதிக்க முடி யாது. எமது மார்க்கத்தை இழக்க முடியாது. எமது மைதானத்தை இழக்க முடியாது. ஏன் இந்த கல்முனை கடற்கரை பள்ளிவாசலின் உரிமையை இழக்க முடியாது. உரிமைகளை உடைமைகளை பறிகொடுக்க முடியாது என்பதற்காக எனது தலையை அடைமானம் வைத்து போராடிக் கொண்டிருக்கின்றேன் என்றும் ஹரீஸ் கூறினார்.

கல்முனையில் நடைபெற்ற முஸ்லிம் சமூகத்தின் சமகால அரசியல் வகிபாகம் மற்றும் கல்முனையின் எதிர்கால நகர்வுகள் தொடர்பான பொதுக் கூட்டத்தில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,


கல்முனை பிரதேச செயலக விவகாரம் தொடர்பிலும் ரணிலை பாராளுமன்றத்துக்குள் ஜனாதிபதியாக தெரிவு செய்கின்ற தேர்தலில் கூட தமிழ்க் கட்சிகள் சேர்ந்து டலஸ் அழகப் பெருமவுடன் ஒப்பந்தம் புரிந்தது. அந்த அளவுக்கு இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு , தமிழர் ஐக்கிய முன்னணி, சி. வி. விக்னேஸ்வரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் போன்ற எல்லோரும் கல்முனை பிரச்னையை முன்னிறுத்தி ஒப்பந்தம் செய்திருக்கிறார்கள். இங்கு மாதக்கணக்கில் போராட்டம் நடைபெற்ற போதும் கல்முனை நகரை தமிழர்கள் முற்றுகையிட்ட போதும் எஸ். சிறீதரனும், இரா. சாணக்கியனும், எம். ஏ. சுமந்திரனும், செ. கஜேந்திரனும் வந்து எமது மண்ணை துண்டாடுவதற்கு முற்பட்டனர்.

அதேநேரத்தில் பாராளுமன்றத்தில், ஜனாதிபதி செயலகத்தில் இந்த பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரும் சேர்ந்து சென்று கல்முனை பிரதேச செயலகத்தை தரம் உயர்த்தி கடற்கரை பள்ளிவாசல் வீதியால் பிரித்து கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தைப் பிரித்துத் தர வேண்டும் என்று கோரிய போது ஜனாதிபதி சொன்ன விடயம் என்னவென்று தெரியுமா? இதை கல்முனை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸுடன் பேச வேண்டும். அவருடன் பேசாமல் எந்த உத்தரவாதத்தையும் உங்களுக்கு தரமுடியாது என்று. கல்முனை உப பிரதேச செயலகத்தில் நிதி பிரிவை தரவேண்டும், கணக்காளரை நியமிக்க வேண்டும் என்ற போது கூட அதுவும் செய்ய முடியாது என்று ஜனாதிபதி ரணில் வெறுங்கையுடன் திருப்பி அனுப்பியதன் காரணமாக இந்த மண்ணில் மாதக் கணக்கில் போராட்டம் நடக்கிறது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ வென்று ஆட்சிக்கு வந்தபோது தமிழ் மக்கள் கிழக்கு மாகாணத்தில் ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட வாக்குகளை அவருக்கு வழங்கியதால் உரிமையோடு சென்று அவர்களின் தேவைகளை கேட்டார்கள். கிழக்கு முஸ்லிம்கள் உங்களுக்கு எதிராக வாக்குகளை வழங்கியிருக்கிறார்கள் என்று கூறி நீங்கள் கல்முனை நகரத்தை துண்டாடித்தாருங்கள் நாங்கள் ஒன்றுக்கு இரண்டு இலட்சம் வாக்குகளை தருகிறோம் என்று கருணாவும், பிள்ளையானும், வியாழேந்திரனும் கூறிய போது இந்த மண்ணின் உரிமை மயிரிழையில் ஊசலாடிக் கொண்டிருந்தது.

அந்த காலகட்டம் எனக்கு பெரும் சவாலான காலகட்டமாக இருந்தது. நமது சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் இருக்கின்றோம். அவர்கள் எல்லாம் ஆளுங்கட்சியில் இருக்கின்றார்கள். ஆனாலும் ஆளுங்கட்சியில் அதாஉல்லா, முஷாரப் போன்றவர்கள் செல்வாக்கற்ற

வெறும் எம்.பிக்களாக மௌனமாக வாய்மூடி இருந்து கொண்டிருந்தார்கள். யார் இந்த பிரச்னையை கோத்தா அரசுடன் பேசி முஸ்லிம்களின் நிலங்களை காப்பாற்றுவது என்று இருக்கின்ற போது. அந்த நேரத்தில் நாங்கள் அவர்களோடு பேசாவிட்டால் கல்முனை பறிபோய்விடும். பறிபோனால் மீண்டும் கிடைக்காது என்ற நிலையை உணர்ந்து அவர்களுடன் பேச சென்றோம் - என்றார். (எ)



# ஜனாஸாக்கள் கட்டாய தகனம் குறித்து உரிய விசாரணைகள் நடத்த வேண்டும்

## காத்தான்குடியில் கையெழுத்து வேட்டை

காத்தான்குடி, ஓக. 05

கொரோனா பெருந்தொற்று காலத்தில் ஜனாஸாக்களை கட்டாய தகனம் செய்தமை தொடர்பில் பக்கச் சார்பற்ற முறையில் விசாரணை நடத்த வேண்டும் என வலியுறுத்தி மட்டக்களப்பு காத்தான்குடியில் கையெழுத்து பெறும் நடவடிக்கை நடைபெற்றது.

தேசிய சுஹதாக்கள் ஞாபகார்த்த நிறுவனம் இந்த கையெழுத்து பெறும் நடவடிக்கையை மேற்கொண்டது.

34 ஆவது வருட சுஹதாக்கள் ஞாபகார்த்த தினம் காத்தான்குடியில் அனுஷ்டிக்கப்பட்ட நிலையில் இந்தக் கையெழுத்து வேட்டையும் நடைபெற்றது.

கோவிட் - 19 வைரஸ் தொற்று நிலவிய காலப்பகுதியில் முஸ்லிம்களுடைய ஜனாஸாக்கள் கட்டாயமாக தகனம் செய்யப்பட்டது.

இது தொடர்பில் அரசாங்கம் நீதியான விசாரணை ஒன்றை நடத்தி தகனம் செய்ய காரணமானவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தி மகஜர் ஒன்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கையளிப்பதற்காக அந்த மகஜரில் கையெழுத்து பெரும் நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்பட்டது.

(எ)

# திரியாய் தமிழ் மகா வித்தியாலயத்தின் மாணவர்கள் தேசிய மட்டத்துக்கு தெரிவு




மட்டக்களப்பு, ஓக. 05

இலங்கை பாடசாலை மெய்வல்லுநர் சங்கத்தால் ரிட்ஸ்பரி நிறுவனத்தின் அனுசரணையில் நாடு பூராக நடைபெற்று வரும் 53 ஆவது சேர் ஜோன் ராபர்ட் கனிஷ்ட மெய்வல்லுநர் போட்டியில் கிழக்கு மாகாணம் சம்பியனானது.

இந்தப் போட்டி மட்டக்களப்பு வெபர் மைதானத்தில் நடைபெற்றது.

இதேவேளை, திருகோணமலை திரியாய் தமிழ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த மாணவர்கள் மூன்று தங்கப் பதக்கங்களையும், 11 வெள்ளிப் பதக்கங்கள் மற்றும் 4 வெண்கலப் பதக்கங்களைப் பெற்று தேசிய மட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

பெண்களுக்கான போட்டிகளில் மொத்தப் புள்ளிகளின் அடிப்படையில் திரியாய் தமிழ் மகா வித்தியாலய மாணவிகள் 52 புள்ளிகளைப் பெற்று கிழக்கு மாகாண மட்டப் போட்டியில் 2ஆம் இடத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளனர்.(எ)

# புகாரி அரபுக் கல்லூரியின் 5ஆவது பட்டமளிப்பு விழா





கிண்ணியா, ஓக. 05

திருகோணமலை, கிண்ணியா நத்துவதுல் புகாரி அரபுக் கல்லூரியின் ஐந்தாவது பட்டமளிப்பு விழா கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

கல்லூரியின் அதிபர் எஸ். எம். முஜீர் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர் ஏ. எல். எம். அதாவுல்லாஹ், முன்னாள் திருகோணாமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்துல்லாஹ் மகரூப், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், உலமாக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.இதன்போது 25 பேர் பட்டங்களை பெற்றுக் கொண்டனர். (எ)

# மூதூரில் 17 பேர் படுகொலை; 18ஆம் ஆண்டு நினைவேந்தல்

மூதூர், ஓக. 05

திருகோணமலை, மூதூரில் 2006ஆம் ஆண்டு இடம்பெற்ற படுகொலைச் சம்பவத்தில் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த தொண்டு நிறுவனமான அக்ஷன் பாம் என்ற நிறுவனத்தில் பணியாற்றிய 17 பேர் உயிரிழந்து நேற்றுடன் 18 வருடங்களாகின்றன.

இந்த நிலையில், தங்களுடைய உறவுகள் படுகொலை செய்யப்பட்டதற்கான நீதி இதுவரை கிடைக்கவில்லை என உயிரிழந்தவர்களின் உறவினர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

2006 ஜூலை மாதம் 31ஆம் திகதி வழமை போல் கடமையின் நிமித்தம் மூதூரில் உள்ள அலுவலகத்துக்குச் சென்றிருந்த இப்பணியாளர்கள் மூதூர் பகுதியில் நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக அலுவலகத்தை விட்டு வெளியேற முடியாத நிலையில் அங்கேயே தங்கியிருந்த சந்தர்ப்பத்தில் 2006 ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த சம்பவத்தில் 4 பெண்கள் உட்பட 17 பணியாளர்கள் உயிரிழந்தனர். மூதூர் பொது மருத்துவமனைக்கு அருகில் இயங்கி வந்த இந்த சர்வதேச தொண்டு நிறுவனத்தில் 17 பணியாளர்களும் கடமையில் இருந்த போது, சீருடை அணிந்து ஆயுதம் தரித்தோர் நிறுவன வளாகத்துக்குள் நுழைந்து,அவர்களை சுட்டுப் படுகொலை செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் கப்பல்கள், விமானங்கள் அமெரிக்காவிலிருந்து விரைவு

## மத்திய கிழக்கில் போர் பதற்றம்



வாஷிங்டன், ஒக. 05

**ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே படு கொலைக்கு இஸ்ரேலை பழிவாங்குவோம் என ஈரான் விடுத்த எச்சரிக்கையை அடுத்து அமெரிக்க போர்க்கப்பல்கள் மற்றும் விமானங்கள் மத்திய கிழக்கு பகுதிக்கு செல்ல உத்தரவிடப்பட்டுள்ளது.**

ஈரான் ஜனாதிபதி மசூத் பெஸ்கியன் பதவியேற்பு விழாவில் பங்கேற்க ஹமாஸ் அரசியல் பிரிவு தலைவர் இஸ்மாயில் ஹனியே ஈரான் சென்றார். ஜூலை 31இல் தலைநகர் தெஹ்ரானில் உள்ள விருந்தினர் இல்லத்தில் தங்கியிருந்தபோது அவர் படுகொலை செய்யப்பட்டார். அவரது படுக்கை அறையில் ஏற்கெனவே குண்டு வைக்கப்பட்டிருந்ததாக முன்பு தகவல் வெளியானது. ஆனால் ஈரான் இராணுவம் விடுத்த அறிக்கையில், "7 கிலோ எடையுள்ள குறுகிய தூரம் சென்று தாக்கும் ஏவுகணை மூலம் இஸ்மாயில் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது" என கூறியிருந்தது.


இஸ்மாயில், ஈரானுக்கு வரும்போதெல்லாம், ஈரான் இராணுவத்தின் பாதுகாப்பில் உள்ள இதே விருந்தினர் மாளிகையில்தான் தங்குவார். ஈரான் முன்னாள் ஜனாதிபதி இப்ராகிம் ரைசி கடந்த மே மாதம் ஹெலிகொப்டர் விபத்தில் இறந்தபோது, அவரது இறுதிச் சடங்கில் பங்கேற்க வந்த இஸ்மாயில் இங்குதான் தங்கியிருந்தார். அவரை அப்போதே படுகொலை செய்யத் திட்டமிடப்பட்டது. ஆனால், இப்ராகிம் ரைசி இறுதிச்சடங்கில் பங்கேற்க ஏராளமான கூட்டம் திரண்டிருந்ததால் இந்தத் திட்டம் கைவிடப்பட்டு, கடந்த 31ஆம் திகதி நிறைவேற்றப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இஸ்ரேல் உளவுப் பிரிவான மொசாட், தனது ஈரான் உளவாளிகள் மூலம் இந்தத் தாக்குதலை நடத்தியிருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

விருந்தினராக வந்த இஸ்மாயிலை படுகொலை செய்ததற்காக, இஸ்ரேல் கடும் தண்டனை அனுபவிக்கும் என ஈரான் மதத் தலைவர் ஐயத்துல்லா அலி எச்சரிக்கை விடுத்திருந்தார். "பழிவாங்கும் நடவடிக்கை சரியான நேரத்தில், சரியான இடத்தில், சரியான விதத்தில் மிகக் கடுமையாக மேற்கொள்ளப்படும். இஸ்மாயில் மீதான தாக்குதலுக்கு அமெரிக்க அரசு ஆதரவு வழங்குவது குற்றச்செயல்" என ஈரான் இராணுவம் அறிக்கை வெளியிட்டது.

"இஸ்ரேல் அனைவரையும் சண்டைக்கு இழுக்கிறது. எனவே இஸ்ரேல் மீது ஒருங்கிணைந்த தாக்குதல் நடத்தப்படலாம்" என ஹிஸ்புல்லா தலைவர் ஹாசன் நஸ்ரல்லாவும் சூசகமாக தெரிவித்திருந்தார். காஸாவுக்கு ஆதரவு தெரிவிக்கும் ஏமனில் உள்ள ஹவுதி தீவிரவாதிகளும் இஸ்ரேலுக்கு எதிரான ஒருங்கிணைந்த தாக்குதலில் ஈடுபடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில், அமெரிக்க கடற்படையில் உள்ள யு. எஸ். எஸ். ஆபிரகாம் லிங்கன் விமானம் தாங்கி போர்க்கப்பலை, ஓமான் வளைகுடா பகுதிக்கு செல்ல அமெரிக்க பாதுகாப்புத் துறை அமைச்சர் லாய்ட் ஆஸ்டின் உத்தரவிட்டார். ஓமான் வளைகுடா பகுதியில் ஏற்கனவே யு. எஸ். எஸ். தியோடர் ரூஸ்வெல்ட் விமானம் தாங்கி போர்க்கப்பல் உட்பட இதர போர்க்கப்பல்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. மேலும், போர் விமானங்கள் படைப்பிரிவு, ஏவுகணைகள் வீசும் போர்க்கப்பல்கள் ஆகிய வற்றையும் மத்திய கிழக்கு மற்றும் மத்திய தரைக்கடல் பகுதிக்கு செல்ல அமெரிக்க இராணுவத் தலைமையகமான பென்டகன் உத்தரவிட்டுள்ளது. காஸா மீதான தாக்குதல் தொடங்கியதில் இருந்து, இஸ்ரேலை பாதுகாக்க, அமெரிக்க படைகள் தற்போது மிகப் பெரியளவில் அனுப்பப்படுகின்றன.

இதுகுறித்து அமெரிக்க தேசிய பாதுகாப்பு சபை ஒருங்கிணைப்பாளர் ஜோன் கிர்பி கூறும்போது, "ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் படுகொலைக்கு பழிவாங்குவோம் என ஈரான் மதத் தலைவர் தெளிவாக அறிவித்துள்ளார். அவர்கள் இஸ்ரேல் மீது மற்றொரு தாக்குதல் நடத்த விரும்புகிறார்கள். இதனால் அந்தப் பகுதியில் பாதுகாப்பை அதிகரிப்பதை நாங்கள் உறுதி செய்ய வேண்டும்"- என்றார். (எ)



# அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள இஸ்ரேலுக்கு அமெரிக்கா உதவும்

## ஜனாதிபதி ஜோ பைடன் உறுதி

வாஷிங்டன், ஒக. 05

ஈரானின் அச்சுறுத்தல்களுக்கு எதிராக இஸ்ரேலின் பாதுகாப்புக்கான அனைத்து உதவிகளையும் அமெரிக்கா வழங்கும் என்று அந்த நாட்டு ஜனாதிபதி ஜோ பைடன் உறுதியளித்துள்ளார்.

ஈரான் தலைநகர் தெஹ்ரானில் ஹமாஸ் அரசியல் தலைவர் இஸ்மாயில் ஹனியே படுகொலை செய்யப்பட்டார். இதனையடுத்து, இஸ்மாயில் ஹனியே கொல்லப்பட்டதற்குப் பழிவாங்க இஸ்ரேல் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று ஈரானிய உச்ச ஆன்மீகத் தலைவர் ஐயத்துல்லா அலி கமேனி அறிவித்தார். இதனால், இஸ்ரேல் - ஈரான் இடையே பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகுவுடன் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தொலைபேசியில் உரையாடியதாக வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

இதனிடையே, ஈரான் எத்தகைய தாக்குதல்களை நடத்த முற்பட்டாலும் அதனை எதிர்கொள்ள இஸ்ரேலிய தற்காப்புப் படைகள் தயார் நிலையில் இருப்பதாக அந்த நாட்டின் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (எ)

# காஸா பாடசாலை மீது இஸ்ரேல் தாக்குதல்

## 15 பேர் பலி; 29 பேர் படுகாயம்

காஸா, ஒக. 05

காஸாவில் உள்ள பாடசாலை மீது இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 15 பேர் பலியாகினர்.

ஹமாஸ் தளபதிகள் மற்றும் அந்த அமைப்பினரின் பதுங்கு குழியாக இந்த பாடசாலை பயன்படுத்தப்பட்டு வந்தது என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

இதேவேளை, காஸாவில் உள்ள ஷெஜையா என்ற இடத்தில் செயல்பட்டு வந்த பாடசாலை மீது இஸ்ரேல் படையினர் தாக்குதல் நடத்தினர். இதில் அந்த பாடசாலையில் தஞ்சமடைந்திருந்த பலஸ்தீனர்கள் 15 பேர் பலியாகினர். 29 பேர் படுகாயமடைந்தனர் என்று காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (எ)

## ஹமாஸ் தலைவர் தங்கிய கட்டடத்தில்

# பல மாதங்களுக்கு முன்பே குண்டு வைத்தது அம்பலம்

தெஹ்ரான், ஒக. 05

ஈரானில் ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே தங்கியிருந்த விருந்தினர் மாளிகையில் பல மாதங்களுக்கு முன்பே வெடிகுண்டு பதுக்கி வைக்கப்பட்டு, ரிமோட் கொன்ட்ரோல் மூலம் வெடிக்கச் செய்யப்பட்டதாக ஆய்வு நடத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

வடக்கு தெஹ்ரானில் ஈரான் இராணுவத்தினரின் பாதுகாப்பில் உள்ள 'நெசாத்' என்ற விருந்தினர் மாளிகையில் இஸ்மாயில் ஹனியே தங்கியுள்ளார்.

இந்த நிலையில், கடந்த 31ஆம் திகதி நடந்த தாக்குதலில் இஸ்மாயில் மற்றும் அவரது மெய்க்காப்பாளர்கள் உயிரிழந்தனர்.

இந்த தாக்குதல் நடந்த விருந்தினர் மாளிகையை 2 ஈரான் அதிகாரிகள், ஓர் அமெரிக்க அதிகாரி உட்பட மத்திய கிழக்கு நாடுகளைச் சேர்ந்த 7 அதிகாரிகள் குழுவினர் ஆய்வு நடத்தினர். விருந்தினர் மாளிகையின் படுக்கை அறையில் ஏற்கனவே மறைத்து வைக்கப்பட்டிருந்த குண்டு வெடித்தது விசாரணையில் தெரியவந்துள்ளது. இஸ்மாயில் இந்த அறையில் தங்கியது உறுதி செய்யப்பட்டவுடன் தாக்குதல் நடத்தியுள்ளனர் என தெரியவந்துள்ளது. இது, செயற்கை நுண்ணறிவு (AI) தொழில்நுட்பத்தில் தயாரிக்கப்பட்ட அதிநவீன வெடிகுண்டு என்றும் கூறப்படுகிறது. இந்த வெடிகுண்டு பல மாதங்களுக்கு முன்பே, விருந்தினர் மாளிகைக்குள் கொண்டு செல்லப்பட்டு மறைத்து வைக்கப்பட்டுள்ளதும் தெரியவந்துள்ளது.


இந்த நிலையில், இஸ்மாயில் படுகொலை தொடர்பாக துருக்கி ஊடகங்களில் பல்வேறு செய்திகள் வெளியாகின. இஸ்ரேல் உளவுப் பிரிவான 'மொசாட்' அமைப்பை சேர்ந்தவர் படுகொலையை அரங்கேற்றியதாக அதில் கூறப்பட்டுள்ளது. இஸ்ரேல் முகவர் அமித் நாகேஷ் என்பவர் இந்த சதி செயலில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ)

# ஹமாஸ் தலைவர் கொலையில் ஈரான் அதிகாரிகள்மீது சந்தேகம்

வாஷிங்டன், ஒக. 05

ஹமாஸ் தலைவர் இஸ்மாயில் ஹனியே கொலை செய்யப்பட்ட சம்பவத்தில் ஈரானின் இஸ்லாமிய புரட்சிகர பாதுகாப்புப் படை அதிகாரிகள் மீது சந்தேகம் எழுந்துள்ளது. இவர்கள் இஸ்ரேல் உளவு அமைப்பான மொசாட்டின் முகவர்களாக செயல்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

இது குறித்து பிரிட்டனின் டெலிகிராப் நாளிதழ் வெளியிட்ட செய்தியில், "இஸ்மாயில் ஹனியே அடிக்கடி தங்கும் தெஹ்ரானில் உள்ள விருந்தினர் மாளிகையின் 3 அறைகளில் முன்கூட்டியே வெடிகுண்டுகள் மறைத்து வைக்கப்பட்டன. இந்த வெடிகுண்டுகளை ஈரானின் ஐ. ஆர். ஜி. சி. படையைச் சேர்ந்த 2 அதிகாரிகள் மறைத்து வைத்தனர். இவர்கள் மொசாட்டின் முகவர்கள். இந்த அறையில் ஹனியே தங்கியிருப்பது உறுதி செய்யப்பட்டதும் குண்டுகள் வெடிக்க வைக்கப்பட்டன என்று அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இஸ்மாயில் ஹனியே கொலையில் ஐ. ஆர். ஜி. சி. படையினருக்கு தொடர்பு இருப்பது குறித்து ஈரான் அரசு தரப்பில் அதிகாரபூர்வமாக எந்தத் தகவலும் தெரிவிக்கப்படவில்லை. எனினும், அந்தப் படையைச் சேர்ந்த அதிகாரிகள், வீரர்கள் உட்பட 24 பேர் கைது செய்யப்பட்டிருப்பதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியுள்ளன. ஈரான் இராணுவம் உட்பட அனைத்துத் துறைகளிலும் இஸ்ரேலின் மொசாட் முகவர்கள் ஊடுருவி இருப்பதாகவும் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# இணைய வீஸா மூலம் ஏற்படவிருந்த பெரும் நிதி இழப்பு தடுக்கப்பட்டது!

## ஐக்கிய மக்கள் சக்தி அறிக்கை



கொழும்பு, ஓக. 05

**இணைய வீஸா சேவை தொடர்பில் தற்போது நடைமுறையில் உள்ள முறைமையை மாற்றி, வெளிநாட்டு நிறுவனங்களிடமிருந்து சேவையை பெறுவதற்கான அமைச்சரவையின் தீர்மானத்தை வலுவற்றதாக்கி உயர்நீதிமன்றம் பிறப்பித்த இடைக்கால தடை உத்தரவால், ஏற்படவிருந்த சுமார் 40 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான இழப்பு மற்றும் குற்றச்செயல்களை தடுக்க முடிந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.**

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இணைய வீஸா இலத்திரனியல் பயண அத்தாட்சிப்படுத்தும் நடவடிக்கையைத் தனியார் நிறுவனமொன்றுக்கு வழங்கும் அமைச்சரவை தீர்மானத்தை அமுலாக்க உயர்நீதிமன்றம் வெள்ளிக்கிழமை இடைக்கால தடை விதித்தது.

தற்போதுள்ள இணைய வீஸா முறையை மாற்றி இலத்திரனியல் பயண அத்தாட்சிப்படுத்தும் நடவடிக்கையை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்க அமைச்சரவை அனுமதி வழங்கியிருந்தது. குறித்த அமைச்சரவை தீர்மானத்தை அமுல்படுத்தவே உயர்நீதிமன்றம் இடைக்காலத் தடையை விதித்தது.

இந்நிலையில் தேசிய பாதுகாப்பையும் நாட்டின் சுயாதீனத்தையும் பெரும் ஆபத்தில் ஆழ்த்திய இந்த முடிவு, நாட்டின் குடிமக்களின் தரவை வணிக நிறுவனங்களுக்கு தவறாகப் பயன்படுத்த அனுமதித்தாகவும் அவர்களின் உயிரை பணயம் வைக்க இடமளித்துள்ளது.

இந்தத் தீர்மானம் நடைமுறைப்படுத்தப்பட்டால் நாட்டுக்கு 40 ஆயிரம் கோடி ரூபாய்க்கும் அதிகமான இழப்பு ஏற்படும். இந்த மோசடி மூலம், அரசாங்கம் பாதுகாக்க வேண்டிய குடிமக்களின் இறையாண்மையை அப்பட்டமாகக் காட்டிக் கொடுத்துள்ளது. அரச வருமானம் போலவே நாட்டின் சுற்றுலா துறையும் கடுமையான ஆபத்தில் இருந்திருக்கும்.

நாட்டின் எதிர்கால அரசியலின் மிகவும் தீர்மானமிக்க இறுதி நேரத்திலும் கூட, தமது நட்புவட்டார நண்பர்களுக்கு நாட்டின் சொத்துக்களை உறிஞ்சுவதற்கு இடம்கொடுக்கும் அளவுக்கு நடந்து கொள்வதானது இந்த அரசாங்கத்தின் வெட்கக்கேட்டையே நன்கு வெளிப்படுத்தியுள்ளது.

இந்தப் பெரும் மோசடியைத் தடுக்க, உயர் நீதிமன்றத்தை நாடி, இந்த சட்ட ரீதியான வெற்றியைப் பெற நடவடிக்கை எடுத்த பாராளுமன்ற உறுப்பினர்கள் அசோக அபேசிங்க, பாட்டலி சம்பிக்க ரணவக்க, சுமந்திரன், ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த உயர் நீதிமன்ற தீர்ப்பை மதித்து, வீசா மோசடியை உடனடியாக இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதியிடம் வலியுறுத்தி கேட்டுக் கொள்கிறோம் - என்றுள்ளது. (ஐ)

# முறைகேடுகள் நடக்கும் வாக்குச்சாவடிகள் இரத்து!

## தேர்தல் ஆணைக்குழு தீர்மானம்

கொழும்பு, ஓக. 05

ஜனாதிபதித் தேர்தல் நடைபெறும் நேரத்தில் முறைகேடுகள் மற்றும் கருத்து மோதல்கள் நடைபெறும் வாக்குச்சாவடிகளை இரத்து செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த தேர்தல்களிலும் இவ்வாறான வாக்குச்சவாடிகள் இரத்து செய்யப்பட்டன என்ற தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் விசேட பாதுகாப்பு வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தலின்போது பொதுவாக தேர்தல் வன்முறைகள் பதிவாகும் சுமார் 20 பகுதிகளை அடையாளம் கண்டுள்ளதாக ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. இவ்வாறான பகுதிகளுக்கு கூடுதல் பாதுகாப்பை வழங்குவதில் இந்த ஆண்டு கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேர்தலில் யாரை ஆதரிப்பது? ரிஷாத் கட்சியின் முடிவு நாளை!

கொழும்பு, ஓக. 05

ஜனாதிபதித் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பில் உத்தியோகபூர்வ முடிவை எடுப்பதற்காக ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் உயர்மட்டக் கூட்டம் நாளை கூடுகின்றது.

கொழும்பிலுள்ள அந்தக் கட்சியின் பணிமனையில் இந்தக் கூட்டம் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

முஸ்லிம் மக்களின் 10 பிரச்னைகளை மையப்படுத்தி அவற்றுக்கு தீர்வு தரக்கூடிய ஒருவரை ஆதரிப்பது என்றும் எடுக்கப்படும் முடிவு கட்சியின் உறுதியான முடிவாக இருக்கும் எனவும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது.

இதேநேரம், அந்தக் கட்சியின் சிலஉறுப்பினர்கள் சுயாதீனமாக செயல்படப்போவதாகவும் அவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளனர் என்றும் அந்தக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ)

# வான் சாகசத்தில் ஈடுபட்ட சிப்பாய்கள் காயமடைந்தனர்

கொழும்பு, ஓக. 05

வான் சாகச நிகழ்வின்போது இடம்பெற்ற விபத்தில் இரண்டு இராணுவ சிப்பாய்கள் காயமடைந்துள்ளனர்.

மொனராகலை - வெல்லவாய - ஊவா - குடாஓயா கொமாண்டோ ரெஜிமெண்ட் பயிற்சி நிலையத்தில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

அந்த நிலையத்தில் பயிற்சிகளை பெற்று வெளியேறும் இராணுவத்தினருக்காக விசேட நிகழ்வொன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன்போது, வான் சாகசத்தில் ஈடுபட்ட இரு சிப்பாய்கள் விபத்தில் சிக்கினர். இவர்களில் ஒருவரின் பரசூட் மரங்கள் நிறைந்த பகுதியிலும் மற்றையவரின் பரசூட் தரையிலும் விழுந்ததிலும் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

காயமடைந்த இருவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். (ஐ)

# வான் மோதியதில் ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக. 05

வானும் மோட்டார் சைக்கிளும் மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழந்தார்.

கம்பஹா, அத்தனகல்லை - நிட்டம்புவை - ஹங்வெல்ல வீதியில் நேற்றுமுன்தினம் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நிட்டம்புவையிலிருந்து ஊராபொல நோக்கிப் பயணித்த வான் எதிர்த்திசையில் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளை செலுத்திய 49 வயது நபரே படுகாயமடைந்து, மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார்.

வானின் சாரதியை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ஐ)

# தேர்தல்கால மனித உரிமை மீறல் விசேட நடவடிக்கை முன்னெடுப்பு




கொழும்பு, ஓக. 05

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புடைய மனித உரிமைகள் மீறல் குறித்து விரைந்து நடவடிக்கை எடுப்பதற்கும் இந்தக் காலப்பகுதியில் தேர்தல் சார்ந்த மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

வாக்களிப்பதற்கும் அரசியல் செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கும் சுதந்திரமானதும் - நியாயமானதுமான தேர்தல்களில் பங்கேற்பதற்கும் இலங்கை மக்கள் கொண்டிருக்கும் உரிமையை அங்கீகரிக்கும். இதேவேளை, அந்த உரிமைகள் குறிப்பாக தேர்தலுக்கு முன்னைய, தேர்தல் தினத்தன்று மற்றும் தேர்தலுக்கு பின்னரான காலப்பகுதியில் முழுமையாக பாதுகாக்கப்படுவதை உறுதிசெய்யும் வகையில் தாம் சில விசேட நடவடிக்கைகளை முன்னெடுத்திருப்பதாக மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி பொலிஸாரும், அரச அதிகாரிகளும் நாட்டின் அரசமைப்புக்கு மதிப்பளித்து அவர்களின் கடமைகளையும் - பொறுப்புகளையும் முழுமையாக நிறைவேற்றவேண்டியதன் அவசியத்தை மீள்வலியுறுத்தி அவர்களுக்கான விசேட வழி காட்டல்களை ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

இதேபோன்று, இந்த இரு தரப்பினரும் சட்டத்தின் பிரகாரம் சகல தரப்பினருக்கும் சமத்துவமான பாதுகாப்பை வழங்கவேண்டியது அவசியம் எனவும், எவ்வகையிலும் பக்கச் சார்பான நிலைப்பாட்டையோ, ஒடுக்குமுறை சிந்தனையையோ வெளிப்படுத்தக்கூடாது எனவும் மனித உரிமைகள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், ஜனாதிபதித் தேர்தலுடன் தொடர்புபட்ட வகையில் இடம்பெறக்கூடிய மனித உரிமைகள் மீறல் குறித்து, 076 7914695 என்ற கைபேசி இலக்கம்ஊடாகவோ அல்லது 011 2505566 என்ற தொலைநகல் இலக்கத்தின் ஊடாகவோ அல்லது iihrcsrilanka@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாகவோ தேர்தல் சார்ந்த மனித உரிமை மீறல்கள் தொடர்பில் ஆணைக்குழுவில் முறைப்பாடளிக்க முடியும்.

இந்த முறைப்பாடுகள் தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டியதன் அவசியத்தை கருத்தில்கொண்டு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கொழும்பிலுள்ள தலைமை பணிமனையிலும், பிராந்திய பணிமனைகளிலும் இதற்கென சிறப்பு அதிகாரிகள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். (ஐ)

# ரணிலை ஆதரிக்கும் பெரமுன எம். பிக்கள் 100ஐ கடந்தனராம்!

கொழும்பு, ஓக. 05

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 100ஐ கடந்துள்ளதாக ஜனாதிபதி பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேநேரம், ஜனாதிபதித் தேர்தலில் ரணிலுக்கு ஆதரவு தெரிவித்த சிறீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியை சேர்ந்த பாராளுமனற உறுப்பினர்களை மீண்டும் இணைத்துக் கொள்ள கட்சி சார்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

குறித்த உறுப்பினர்களுக்கு தனித் தனியாக அழைத்து அவர்களை மீண்டும் இணைத்து அவர்களின் ஆதரவை பெறும் வேட்பாளரை நியமிக்க தயாராகி வருவதாக தெரியவந்துள்ளது.

தற்போது உறுப்பினர்கள் குழு ஒன்று கட்சி சார்பில் முன்னிலையாகவுள்ள வேட்பாளருக்கு ஆதரவு வழங்க இணக்கம் தெரிவித்துள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்தி...

திருகோணமலைக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தமிழ் அரசுக் கட்சியினரை நேற்று சந்தித்து பேசினார். இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு,

13ஆம் திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்து வதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம். மத்திய அரசாங்கம் எடுத்த அதிகாரங்களை மாகாணத்துக்கு வழங்குவதற்கு எடுக்கப்படும். இது தொடர்பாக மாவை சேனாதிராசா, சுமந்திரன் ஆகியோருடன் உடன்பட்டுள்ளோம்.

காணி அதிகாரத்தை வழங்குவதற்கு அமைச்சரவை அனுமதித்துள்ளது. பொலிஸ் அதிகாரம் குறித்து புதிய பாராளுமன்றத்தில் பேசுவோம்.

13ஆம் திருத்தச் சட்டம் தொடர்பாக கட்சித் தலைவர்களுடனான சந்திப்பில் பேசுவோம். அப்போது, இன்னமும் அதிகாரங்கள் அதிகம் கிடைக்க வாய்ப்புள்ளது. மாகாண சபைத் தேர்தலை 1988 ஆம் ஆண்டு சட்டத்தின்படி நடத்துவோம் என்றும் கூறினார்.

இந்தியாவுடன் இணைந்து திருகோணமலை அபிவிருத்தி செய்யப்படும். பிரதான துறைமுகமாக திருகோணமலை மாற்றப்படும். எண்ணெய் சுத்திகரிப்பு நிலையமும் திருகோணமலையில் அமைக்கப்படும். கப்பல்துறை விருத்தி செய்யப்படும். ஆயிரம் ஏக்கருக்கும் மேற்பட்ட பகுதியில் முதலீட்டு வலயங்களை அமைப்பதற்காக இரு நிறுவனங்களுடன் பேச்சு நடந்து வருகிறது.

தலைமன்னார் - திருகோணமலை இடையே புதிய பாதை திறக்கப்படும் என்றும் ஜனாதிபதி இதன்போது, தெரிவித்தார். (ஐ)

## ஜெனரல்...

ஸூபிரிட்ஜ்.

இனப்படுகொலை தொடர்பில் வழக்கு தொடர்வதற்கு சட்டமா அதிபரின் அனுமதி அவசியம் என்ற தேவைப்பாட்டை நீக்கும் சட்டமூலம் தொடர்பில் கடந்த வாரம் நடந்தபொது அபிப்பிராயம் கோரலின்போதே அவர் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

இலங்கையில் கடந்த 2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட காலப்பகுதியில் அழிவு இடம்பெற்ற அநேக பகுதிகளில் பணியில் இருந்தவரும் மிக மோசமான போர் குற்றவாளியாக பலரால் கருதப்படுபவருமான முன்னாள் இராணுவத் தளபதி ஜகத் ஜெயசூரிய கடந்த 2019ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா வந்தார். அவருக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அவுஸ்திரேலிய பெடரல் பொலிஸ் விசாரணை மேற்கொள்வதற்குத் தவறியது ஏன்? - என்று வினவினார்.

அக்காலப்பகுதியில் ஜகத் ஜெயசூரிய மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பான விபரங்களை சில அமைப்புகள் அவுஸ்திரேலிய பெடரல் பொலிஸாருக்கு வழங்கியிருந்தன. இருப்பினும், அப்போது நிலவிய சில நிர்வாக சிக்கல்களால் இதுகுறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பெடரல் பொலிஸில் எவருக்கும் அறிவுறுத்தப்படவில்லை என்று சுட்டிக்காட்டிய ஸூபிரிட்ஜ், "இந்தப் பின்னணி குறித்து நீங்கள் அறிந்திருக்கின்றீர்களா?" என சட்டமா அதிபர் திணைக்களத்தின் சார்பில் முன்னிலையாகியிருந்த அதிகாரி கிறிஸ்தோபர் மலோனிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

அதற்கு பதிலளித்துள்ள கிறிஸ்தோபர் மலோன் இவ்வாறான தனிநபர்கள் சார்ந்த மிகக் குறிப்பான விடயங்கள் தொடர்பில் தனக்கு பரிச்சயம் இல்லை என்றும் இருப்பினும், இதுகுறித்து அவதானம் செலுத்தத் தயாராக தான் உள்ளார் என்றும் கூறினார். (ஐ)

## பிரதம...

24ஆம் திகதி உயர்நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. இதைத் தொடர்ந்து, பொலிஸ் மா அதிபர் தொடர்பான பிரச்னைக்கு பிரதம நீதியரசரும் சபாநாயகரும் கலந்துரை யாடி தீர்வு காண வேண்டும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரி வித்திருந்தார். இந்த நிலையிலேயே மேற் கண்டவாறு சபாநாயகர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## பால்குடிக்க...

பிறந்து 45 நாட்களேயான குழந்தையான சசிரூபன் நிகாஷ் என்ற குழந்தை சித்திரவதையின் பின்னர் கொல்லப்பட்டது. அந்தக் குழந்தையின் தாயாரை சந்தேகத்தின் அடிப்படையில் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணையில், "குழந்தை பால் குடிக்க மறுப்பதால் கைகள், கால்களை திருகினேன். ஆனால், எனது குழந்தையை நான் கொலை செய்யவில்லை" என்று கூறியுள்ளார்.

இதேவேளை, குழந்தையின் உடற்கூற்று பரிசோதனை அறிக்கை நீதிமன்றில் பாரப்படுத்திய பின்னர், நீதிமன்ற உத்தரவின் பேரில் குழந்தை யின் சடலம் ஒப்படைக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-01)

## மூன்று...

மணி நேரத்துக்குள் பேச்சு நடத்தி, கட்சியின் முடிவு அறிவிக் கப்படும் என்று சிறீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக் கீம் தெரிவித்தார். (ஐ)

## அம்பாறையில்...

அவர்களுக்காகக் காத்திருந்த அந்த பொலிஸ் அதிகாரி அங்குவந்த இருவரையும் சுட்டுக் கொன்றுவிட்டு பின்னர் தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்து கொண்டார்.

மூவரை சுட்டுக்கொன்றுவிட்டு தன்னைத் தானே சுட்டு இறந்த பொலிஸ் அதிகாரி இக்கினியாகலைக்கு அருகில் மொனராகலை மாவட்டத்தின் கராண்டுகலை உப பொலிஸ் நிலையத்தில் பணியாற்றியவர் என்று தெரிய வந்தது.

இந்தக் கொலைக்கான காரணம் தெரியவரவில்லை. (ஐ)

## மகிந்தவின்...

ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அன்று பஸில் ராஜபக்ஷ நிபந்தனையின்றி அமைச்சர் எஸ். எம். சந்திரசேனவுக்காக உதவினார். பஸில் ராஜபக்ஷவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் ஏதேனும், விரோதம் இருந்திருந்தால் அதற்குக் காரணம் எஸ். எம். சந்திரசேனவுக்கு தேவையான பதவிகளை வழங்குவதற்காக நாங்கள் போராடியதே.

நம் உள்ளமும் செயலும் தூய்மையானவை. எங்களால் முடிந்ததைச் செய்தோம். ஆனால், இன்று அவர்கள் எடுக்கும் முடிவு அவர்களின் முடிவு. திரும்பி வருபவர்களுக்கு கட்சியின் கதவு திறந்தே உள்ளது அவர்கள் மகிந்த ராஜபக்ஷவின் வாசல் வழியாக கட்சிக்கு வந்து செல்லலாம்.

நாமல் ராஜபக்ஷ அம்பாந்தோட்டைக்கு போனாலும் அம்பாந்தோட்டை வெற்றி பெற இரண்டாவது வரிசை உள்ளது. அநுராதபுரமும் அப்படித்தான். முதல் வரிசைக்கு போனால் இரண்டாம் வரிசைக்கு பொறுப்பேற்று, கட்சியை வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் உள்ளனர். கட்சி இயந்திரம் மிகவும் வலுவாக உள்ளது" என்றார். (ஐ)



ஆடி அமாவாசை தினமான நேற்று கீரிமலை புனித தீர்த்தக் கரையில் தமது தந்தையருக்கு பிதிர்க்கடன் நிறைவேற்றிய தருணம்....

# ரணிலை தோற்கடிப்பதற்கு நால்வர் இரகசியத் திட்டம்!

### முன்னாள் அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு, ஒக. 05

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை தோற்கடிக்க சஜித் பிரேமதாஸ, பஸில் ராஜபக்ஷ, நாமல் ராஜபக்ஷ, தம்மிக பெரேரா ஆகியோர் இரகசிய சதித்திட்டத்தை முன்னெடுத்துள்ளனர் என்று முன்னாள் அமைச்சர் பீ. ஹரிசன் தெரிவித்துள்ளார்.

இந்தக் குழு பல நாட்களாகக் கூடி இந்தக் கலந்துரையாடலை நடத்தியதாகவும் அவர் கூறினார். சஜித் பிரேமதாஸவை ஜனாதிபதியாக்கி பொதுஜன பெரமுனவுக்கு எதிர்க்கட்சி பலத்தை பெற்றுக் கொடுப்பதே இதன் நோக்கம் - என்றும் அவர் கூறினார்.

இது சோதித்துப் பார்க்கும் நேரம் இல்லையென்றும் தப்பித் தவறியேனும் அதிகாரம் மாறிவிட்டால், பெற்றோல், உரத்தின் விலைகள் 5 ஆயிரம் ரூபாயாக உயரும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (ஐ)

## ஊடக நிறுவனங்களுக்கு தேர்தல்கள் குழு அழைப்பு

கொழும்பு, ஒக. 05

அனைத்து ஊடக நிறுவனங்களின் தலைவர்களும் இன்று திங்கட்கிழமை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அழைக்கப்பட்டுள்ளனர்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் பிரசாரம் தொடர்பில் தேவையான அறிவுறுத்தல்களை வழங்குவதற்காகவே ஊடக நிறுவனங்களின் தலைவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று தேர்தல் ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவித்தன. (ஐ)

## கேள்விக்கு...

விக்கிரமசிங்க அங்கு தமிழ் அரசுக் கட்சியினரை சந்தித்து உரை யாடினார்.

இதன்போது, வரலாற்று சிறப்பு மிக்க திருக்கோணேஸ்வரம் ஆலயப் பகுதியை ஆக்கிரமித்துள்ள கடைகளை அகற்றுவது என 2019ஆம் ஆண்டிலேயே உறுதியளிக்கப்பட்டது. ஆனால், இது தொடர்பாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் பல இடங்களில் பேசியுள்ளனர் - பல வாக்குறுதிகள் தரப்பட்டன. ஆனால், அந்த ஆக்கிரமிப்பு அகற்றப்படவில்லை. அதை அகற்றித் தரவேண்டும். இதன்மூலம் அந்த ஆலயத்தின் புனிதத் தன்மை பாதுகாக்கப்படும் என்ற கோரிக்கை விடுக்கப்பட்டது.

ஆனால், இந்தக் கோரிக்கைக்கு பதிலளிக்காத ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "திருக்கோணேஸ்வரம் ஆலயம் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் புனரமைக்கப்படும். அரசாங்கமும் இதற்கு பங்களிக்கும்", என்று மாத்திரம் கூறினார். (ஐ-04)

## 45நாள்களே...

இவ்வாறு கொல்லப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருவதாவது,

பிறந்து 45 நாட்களேயான குழந்தை பால் குடித்த சில மணி நேரத்தில் மயக்க முற்றதாகக் கூறி அளவெட்டி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டது. அங்கிருந்து தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டது. ஆனால், குழந்தை உயிரிழந்து விட்டதாக மருத்துவர்கள் தெரிவித்தனர்.

குழந்தையின் மரண விசாரணையை நடத்திய திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ. ஜெயபாலசிங்கம் குழந்தையின் உடலில் காயங்கள், தழும்புகள் இருக்கின்றமையை கண்டு, பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனையில் குழந்தையின் கை, கால் முறிக்கப்பட்டதும், தலையில் ஏற்பட்ட கடும் காயத்தாலுமே குழந்தை உயிரிழந்தது என்று தெரியவந்தது.

குழந்தையின் தந்தை பிற இடங்களில் தங்கிநின்று கூலி வேலை செய்து வருபவர். இதனால், குழந்தை தாயாரின் பராமரிப்பிலேயே இருந்துள்ளது. இதையடுத்து, குழந்தையின் தாயை தெல்லிப்பழை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குழந்தையின் தந்தையையும் குழந்தையை பராமரிக்க வந்தவரையும் பொலிஸார் தமது கண்காணிப்பில் வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## தேர்தலில்...

வேட்பாளர் விடயத்தை வரவேற்றுள்ளன.

அந்த ஐந்து அமைப்புகளும் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில்,

ஈழத்தமிழ் மக்கள் சார்பாக பல தரப்பட்ட சமூக அமைப்புகளும், அவற்றுடன் பல தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகளும் இணைந்து எதிர்வரும் செப்ரெம்பர் 21 ஆம் திகதி நடத்தத்திட்டமிடப்பட்டுள்ள ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் ஒருவரை களமிறக்குவதற்கு தீர்மானித்துள்ளமையை நாம் மிகுந்த உற்சாகத்துடன் வரவேற்கின்றோம்.

இவ்வாறு களமிறக்கப்படும் பொது வேட்பாளர் மூலம் தமிழ் மக்கள் தமது அரசியல் அபிலாசைகளையும் கோரிக்கைகளையும் ஜனநாயக முறையில் உலகறியச் செய்யவும் - சர்வதேச மயப்படுத்தவும் முடியும் என நம்புகின்றோம் - என்றுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## குவைத்தில் கைதுசெய்யப்பட்ட 24 இலங்கையர்களும் விடுவிப்பு

கொழும்பு, ஓக. 05

குவைத்தில் கைது செய்யப்பட்ட 24 இலங்கையர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனறு வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த 24 இலங்கையர்களும் கடந்த 2 ஆம் திகதி அந்த நாட்டு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டனர்.

“அக்கரையில் நாம்“ என்ற அமைப்பின் குவைத் கிளையினால் ஏற்பாடு செய்யப்பட்ட இசை நிகழ்ச்சியில் குறித்த இலங்கையர்கள் கைதானதாக தெரியவருகின்றது.

உரிய அனுமதியின்றி இசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த குற்றச்சாட்டில் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களும் இசைக் கலைஞர்களும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## பிள்ளையான் கட்சியின் மாநாடு



காரைதீவு, ஓக. 05

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் அம்பாறை மாவட்ட எழுச்சி மாநாடு சனிக்கிழமை காரைதீவு கலாசார மண்டபத்தில் அந்தக் கட்சியின் பிரதிச் செயலாளர் யோகராஜா சந்திரகுமார் தலைமையில் நடைபெற்றது.

இதன்போது வாகன ஊர்வலம் நடைபெற்று தேசிய கொடி, மாகாண கொடி, கட்சி கொடிகள் ஏற்றப்பட்டன.

இந்த மாநாட்டில் பிள்ளையான் என்று அழைக்கப்படும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும், கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் கலந்து சிறப்பித்தார். (எ)

## கப் ரக வாகனம் மோதிய மாணவன் கவலைக்கிடம்

### 12 வயது மாணவியும் காயம்

கொழும்பு, ஓக. 05

வீதியோரத்தில் சென்றுகொண்டிருந்த மாணவர்களை கப் ரக வாகனம் மோதி விபத்துக்குள்ளாக்கியதில் மாணவன் ஒருவர் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இதே வேளை மாணவி ஒருவரும் காயமடைந்துள்ளார்.

கொடகம - அத்துருகிரிய வீதியில் நேற்றுக் காலை இந்த விபத்து இடம்பெற்றது. வாகனமொன்று வீதியோரத்தில் சென்றுகொண்டிருந்த ஞாயிறு அறநெறி வகுப்பு மாணவன் மீது மோதியதில் மாணவன் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருவதாக மீகொட பொலிஸார் தெரிவித்தனர்.

அத்தோடு இந்த விபத்தில் சிக்கிய 12 வயது பாடசாலை மாணவியும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் கூறினர்.

நேற்றைய தினம் கொடகமவிலிருந்து அத்துருகிரிய நோக்கிப் பயணித்த கப் ரக வாகனம், கொடகம சந்திக்கு அருகில் வீதியோரம் சென்றுகொண்டிருந்த மாணவன் மீது மோதி, முன்னோக்கி இழுத்துச் சென்று, அதிர்ஷ்டலாப சீட்டு விற்பனை கடையொன்றில் மோதி நின்றுள்ளது.

அத்தோடு, அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளொன்றும் இந்த விபத்தில் சிக்கியுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். (எ)

# ரணிலை மீண்டும் ஜனாதிபதியாக்க ஓரணியில் திரண்ட சிங்கள கட்சிகள்

கம்பஹா, ஓக. 05

**எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஜனாதிபதியாக்கும் வகையில் சிறீலங்கா பொதுஜன பெரமுன, ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சிறீலங்கா சுதந்திரக் கட்சி என்பனவற்றின் உறுப்பினர்கள் இணைந்து கம்பஹா தொகுதியில் முக்கிய செயல்திட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.**



அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தலைமையில் நடைபெற்ற கூட்டத்திலேயே இந்த கூட்டு செயல்திட்டம் தயாரிக்கப்பட்டது.

கம்பஹா தொகுதியில் கம்பஹா மாநகர சபை மற்றும் கம்பஹா பிரதேச சபை என இரண்டு உள்ளூராட்சி மன்றங்கள் உள்ளன. இந்த நிகழ்வின் அழைப்பாளராக முன்னாள் மாகாண சபை உறுப்பினர் லக்ஷ்மன் குணவர்தன நியமிக்கப்பட்டுள்ளார்.

கம்பஹா தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினராக கடமையாற்றிய நாலக கொடஹேவா தற்போது ஐக்கிய மக்கள் சக்தியுடன் இருக்கின்றார். எனவேதான் கம்பஹா பிரதேச ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவராக அமைச்சர் பிரசன்ன ரணதுங்க செயல்படுகின்றார்.

கம்பஹா உள்ளூராட்சி சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் மொட்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 22 ஆகும். இதில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக நடைபெற்ற கூட்டத்தில் 16 எம்.பிக்கள் கலந்துகொண்டனர்.

கம்பஹா நகர சபையை பிரதிநிதித்துவப்படுத்தும் மொட்டு பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 17 ஆகும். அவர்களில் 12 பேர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளித்துள்ளனர்.

இது தவிர, ஐக்கிய தேசியக் கட்சியின் கம்பஹா தொகுதி அமைப்பாளர் வருண தீப்த ராஜபக்ஷவுடன் உள்ளூராட்சி மன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் ஐ. தே. க. பிரதிநிதிகளும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

டிஜிற்றல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி வாக்கெடுப்பு நிலைய முகவர்களை நியமித்தல், சிறிய பொதுக் கூட்டங்கள் மற்றும் ஜனாதிபதியின் தேல்தல் பிரசார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அனைத்துக் கட்சிகளையும் கொண்ட கூட்டு வழிநடத்தல் குழுவும் இதன்போது நியமிக்கப்பட்டது. (எ)

# நவீன தேசிய இளைஞர் கொள்கை என் ஆட்சியில் கொண்டுவரப்படும்

### சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 05

நாட்டிலுள்ள இளைஞர்களை வலுவூட்டும் வகையில் நவீன தேசிய இளைஞர் கொள்கையை ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியில் கொண்டுவரும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் இளைஞர் சங்க சம்மேளனத்தின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் கொழும்பில் நடைபெற்ற சந்திப்பில் சஜித் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டை வங்குரோத்து நிலையிலிருந்து மீட்பதில் இளைஞர்களின் பங்கு மிகவும் முக்கியமானது என்றும், இதற்காக 10 இலட்சம் தொழில் முயற்சியாளர்களை உருவாக்குவதற்கான தேசிய வேலைத்திட்டத்தில் பங்குதாரர்களாக இளைஞர்களும் இணைய வேண்டும் எனவும் அழைப்பு விடுத்தார்.

மேலும், இளைஞர்களை வலுவூட்டுவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி கொள்கையொன்றைக் கொண்டு வரவுள்ளதாகவும் சஜித் கூறினார். (எ)





## ஆடி அமாவாசை சமுத்திர தீர்த்தோற்சவம்

திருக்கோவில், ஓக. 05

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற திருக்கோவில் சிறீ சித்திரவேலாயுத சுவாமி கோவிலின் வருடாந்த ஆடி அமாவாசை சமுத்திர தீர்த்தோற்சவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

பிதிர்க்கடன் செலுத்தும் ஆடி அமாவாசை உற்சவம் என்பதால் இம்முறை பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். (எ)

## தமிழ்ப் பொது வேட்பாளர் தேவைக்கு அப்பாற்பட்டது

### சொல்கிறார் இராதாகிருஷ்ணன்

ஹற்றன், ஓக. 05

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் நிறுத்தப்படுவது தேவைக்கு அப்பாற்பட்ட விடயம் என தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

ஹற்றனில் நேற்று நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதித் தேர்தலுக்காகத் தற்போது 14 பேர் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

இதில் தமிழ்ப் பொது வேட்பாளர் ஒருவரை நியமித்து, தமிழ் மக்களின் வாக்குகளைப் பிரித்து எடுப்பது என்பது எந்த விதத்திலும் பிரயோசனமற்ற விடயம் என்றும் அவர் கூறினார். (எ)

## காற்றை திறந்த கான்ஸ்டபிள் சேவையிலிருந்து நிறுத்தம்!

கொழும்பு, ஓக. 05

கொழும்பு, வத்தளை பிரதேசத்தில் போக்குவரத்து பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் டிப்பர் ரக வாகனத்தின் சக்கரத்தில் உள்ள காற்றை திறந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இது போன்ற சம்பவங்கள் இடம்பெற்றால் 011 243 3333 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தெரிவிக்குமாறும் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவு, பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

காற்றை விடுவித்த பொலிஸ் அதிகாரியின் செயல்பாடு தொடர்பான காணொலி சமூகவலைத்தளங்களில் வேகமாக பரவி வருகிறது.

இது தொடர்பான விசாரணையின் பின்னர், குறித்த பொலிஸ் அதிகாரி சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (எ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.08.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிடெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org